
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை (14.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

# வன்னி மக்களின் போராட்டத்தால் ஐ.நாவின் வெளியேற்றம் ஒத்திவைப்பு

## இன்று இறுதி முடிபு வெளியாகும்

(கொழும்பு)

வன்னியை விட்டு வெளியேற வேண்டாம் என்று கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம் முன்பாக மக்கள் நடத்திய முற்றுகைப் போராட்டத்தின் பின்னர் அவர்களின் பயணத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதா இல்லையா என்பதை இன்று வெளியிடவுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது

### புலிகள் ஐ.நாவில் முறைப்பாடு?

(கிளிநொச்சி)

தமிழினத்தை இல்லாதொழிக்கும் முயற்சிகளை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள் தமிழர் இனத்தை இல்லாதொழிக்கும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளுக்காகவே அரசாங்கம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை வெளியேற்றி வருவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளணர் என அவ் இணையத்தளச் (14ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லியில் நேற்று மாலை தொடர் குண்டு வெடிப்புக்கள்

### 20 பேர் பலி; 100க்கும் மேற்பட்டோர் காயம்

(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்று மாலை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் குறைந்தது 20 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சந்தைப் பகுதிகளிலும் மக்கள் கூடும் இடங்களிலும் இந்தக் குண்டு வெடிப்புக்கள் நடந்திருக்கின்றன.

முதலாவது குண்டுவெடிப்பு கரோல்பார்க் பகுதியில் உள்ள கஃபார் மார்க்கெட் பகுதியில் மாலை 6.15 மணிக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் பொது மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தால் ஏராளமானவர்கள் காயமடைந்தனர்.

குண்டு வெடிப்பின் தாக்கத்தால் வாகனங்கள் தூக்கியெறியப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரி (14ஆம் பக்கம் பார்க்க)



புதுடில்லியில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதியை பகுப்பாய்வாளர்கள் பார்வையிடுவதையும், குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த பெண் ஒருவரையும் படங்களில் காணலாம்.

## வன்னி மக்களுக்கு வழங்குவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு நிதி சேகரிப்பு

(கொழும்பு)

போர் நடவடிக்கையினால் வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக வழங்குவதற்கான நிதி சேகரிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது சொந்த நிதியில் முதற் கட்டமாக சேர்த்த மூன்று இலட்சம் ரூபாயை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் கையளிக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

கத்தோலிக்க திருச்சபையின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பில் தங்கியுள்ள யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், திருகோணமலை -மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர், அவர்கள் முன்னிலையில் ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் இந்நிதி கையளிக்கப்படவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் மீது மட்டு.வில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொலிஸார் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு தாக்குதல் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். நால்வர் காயமடைந்துள்ளனர்.

புதூர் பிரதேச சபைக்குட்பட்ட திமிலத்தீவு பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.40 மணியளவில் பொலிஸாரின் நிலை மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் காரணமின்றி கொழும்பில் நிற்கக்கூடாது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நியாயமான தேவையின்றி வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தலைநகர் கொழும்பில் தங்கியிருக்கக் கூடாதென இலங்கை அரசாங்கத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

அநாவசியமான முறையில் கொழும்பில் தங்கியிருக்கும் நபர்களினால் நாட்டின் பாதுகாப்பிற்கு குறிப்பாக தலைநகரின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் காணப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்தில் சுமார் 7 ஆயிரம் பேர் நியாயமான காரணங்களின்றி தலைநகரில் உள்ள வீடுகள், விடுதிகள் மற்றும் வேறு இடங்களில் தங்கியிருந்ததாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேவையில் (14ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரத்தில் படகு கவிழ்ந்து இலங்கை அகதிகள் ஏழு பேர் பலி

(இராமேஸ்வரம்)

அரசின் அனுமதி பெறாமல் மண்டபத்திலிருந்து அகதிகளை இலங்கைக்கு ஏற்றிச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்ததால் இரண்டு குழந்தைகள் நான்கு பெண்கள் உட்பட ஏழு பேர் கடலில் மூழ்கி பலியாகினர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது;திருவண்ணாமலை, கோவை, மானாமதுரை முகாம்களில் இருந்து ஐந்துபெண்கள், இரண்டு கைக்குழந்தைகள் உட்பட 13 அகதிகள் கடந்த 11 ஆம் திகதி காலை மண்டபம் சென்றனர்.

அரசின் அனுமதி இல்லாமல் இலங்கை செல்வதற்காக மண்டபம் அண்ணாநகரைச் சேர்ந்த ஏஜென்ட் முருகனைச் சந்தித்தனர்.

இவர்களிடம் தலா ஆறாயிரம் ரூபாய் கட்டணமாகப் பெற்றுக் கொண்ட முருகன், மண்டபம் தோணித்துறை கடற்கரையிலிருந்து இரவு 9 மணிக்கு ஒரு நாட்டுப் படகில் 13 பேரையும் இலங்கைக்கு ஏற்றிச் சென்றார்.

இரவு முழுவதும் வழி தெரியாமல் நடுக்கடலில் சுற்றிய் (14ஆம் பக்கம் பார்க்க)

# பூமிக்கு அடியில் நடந்த அணு சோதனையில் பதிவான தகவல்கள் அழிக்கப்பட்டன

(ஜெனீவா)

உலகம் தோன்றியது எப்படி? 1300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பிரபஞ்சத்தில் ஏற்பட்ட வெடிப்புக்குப் பிறகு அணுக்கள் உருவாகி அவற்றை ஒன்று சேர்த்து வைத்த பொருள் எது என்பதைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

85 நாடுகளைச் சேர்ந்த 8500 விஞ்ஞானிகள் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இதற்காக சுவிஸ்சர்லாந்தின் ஜெனீவா அருகே பிரமாண்ட ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது. செர்ன் ஆய்வுகூடம் சார்பில் பூமிக்கு அடியில் அணு சோதனையை தொடங்கி உள்ளனர். 27 கிலோ மீற்றர் அகலத்தில் ராட்சத குழாய்களில் புரோட்டான் அணுக்களை செலுத்தி அவற்றை மோத விடும் சோதனை தொடங்கப்பட்டது.

இந்த அணு வெடிப்பு சோதனையால் உலகம் அழிந்து விடும் என்ற பீதி பரவியது. ஆனால் இதை விஞ்ஞானிகள் மறுத்தனர். இடதுபக்க ராட்சத குழாயில் புரோட்டான்களை முழுமையாகச் செலுத்தும் பணியில் வெற்றி கிடைத்துள்ளது.

ஆர்வத்துடனும் பரபரப்புடனும் எதிர்பார்க்கப்பட்ட இந்த அணு வெடிப்புச் சோதனையில் விஞ்ஞானிகளுக்கு முதல் தடவையாக இப்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. புரோட்டான் அணுக்களை மோத விடும் சோதனை 2 பிரிவுகளாக நடக்கின்றது. இந்த 2 பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

அணு குழாய்களை மோத விடும் சோதனை நடப்பதற்கு முன்பு 2600 என்று அழைக்கப்படும் கிரேக்க குழுவினர் ஆய்வுகூட அறைக்குள் நுழைந்து எங்கள் சோதனையில் தலையிட வேண்டாம் என்று மிரட்டியதாகக் கூறப்படுகின்றது.

கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்த சில ஆவணங்கள் கம்பியூட்டரில் பதிவாகி இருந்த சில ஆய்வு முடிவுகள் ஆகியவற்றையும் சிலர் அழித்து விட்டனர். ஆனாலும் இதில் அதிக அளவு பாதிப்பு ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது

வடமராட்சி கப்பூது உப்புவெல்ல வீதியில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னம் ஜெயக்குமார் (வயது-48) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 8 ஆம் திகதி வீட்டிலிருந்த போது அன்றிரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இவரைக் கடத்திச் சென்றதாக விசாரணைகளில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டிலிருந்து அண்மையிலேயே இவர் இங்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-52)

## கல்விப் பணிப்பாளர்களின் இடமாற்றம் ஒத்திவைப்பு

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்களின் இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுடன் உரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் பல்வேறு தரப்பினர்களுக்கும் மகஜர்கள் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## மணமகள் தேவை

வடமராட்சி வடமேற்கு உயர் குருகுலம் 1975 அச்சுவினி நட்சத்திரம் Technical Officer-Open University, Engineering Final, 8 இல் செவ்வாய், கேது. பாவம் முதல் சுற்று 31. மூன்று சுற்றும் 43, 28 வயதுக்கு குறைந்த படித்த நற்குணமுள்ள அழகிய மணமகள் தேவை. முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மே/பா வலம்புரி,
விளம்பர இல. 1671
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (1671)

## மணப்பெண் தேவை

திருமணமாகி, மனைவியை இழந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 39-46 வயதுக்குட்பட்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. சுனாமியால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களிடமிருந்து சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. விதவைகளும் விண்ணப்பிக்கலாம். மேல் விபரங்களை நேரில் பேசலாம். விண்ணப்பங்களை 30.09.2008 ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 1669
மே/பா வலம்புரி,
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (1669)

## மருத்துவமனை உதவியாளர் தேவை

மருத்துவமனையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு 35-48 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர் தேவை. உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். 30.09.2008 ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1669
மே/பா வலம்புரி,
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (1669)





பருத்தித்துறை நகர சபையால் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன சந்தைக்கான அடிக்கல் நாட்டும் விழாவிலே பிரதம விருந்தினரான யாழ். அரச அதிபர் க.கணேஷ் உட்பட விருந்தினர்கள் நிற்பதையும் யாழ்.நெக்டெப் திட்டப் பணிப்பாளர் வி.வீரபத்திரபிள்ளை அடிக்கல்லை நாட்டுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)


## கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் இன்று (14.09.2008) நடைபெறும் வேளை அதன் ஆரம்பத்தையும் வரலாறுகளையும் நினைவு கூருவோம். 115 ஆவது ஆண்டில் காலடி வைக்கும் வித்தியாசாலை மேன்மேலும்

# வளர வாழ்த்துகின்றோம்

ஸ்தாபகர் :- கந்தரோடை அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் அவர்கள். ஆரம்பம்:- 1893 சனவரி 30 ஆம் நாள் (நந்தன வருட தைப் பூச நன்னாள்) ஸ்தாபனப் பெயர்:- ஆரம்பத்தில் கந்தரோடை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை. 1951 இல் ஸ்தாபகர் காலமான பின் 1953 இல் இருந்து கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை எனப் பெயரிடப்பட்டது.

முகாமையாளர்கள்:- தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியன ஆரம்பித்த காலம் தொடக்கம் 1943 வரை ஸ்கந்தா ஸ்தாபகர் சி.கந்தையா உபாத்தியாயர் அவர்களே இரு பாடசாலைகளுக்கும் முகாமையாளராக இருந்தார். 1943 ஆம் ஆண்டு தொடக்கம் இரு பாடசாலைகளுக்கும் முகாமையாளராக வைத்திய கலாநிதி சி.சுப்பிரமணியம் J.po.BB இருந்தார்.

அதிபர்கள்:- திரு.அ.கந்தையா உபாத்தியாயர், திரு.சி.கந்தவனம், சிவஸ்ரீ சி.சிவசுப்பிரமணிய ஐயர், திரு.த.வல்லிபுரம், திரு.த. ஆறுமுகம், திரு.த.பெரியதம்பி, திரு.க.கந்தையா, திரு.அ.தற்பரானந்தன், திரு.க. செல்வக்குமாரன் (தற்போது வரை)

தரம் உயர்வு:- 1954 ஆம் ஆண்டு வரை கனிஷ்ட பாடசாலையாக இருந்த இவ் வித்தியாலயம் இவ் ஆண்டிலேயே சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. இதனால் க.பொ.த. (சா/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் சிறிலங்கா ரெலிக்கொம்மின் பிராந்திய முகாமையாளர் செ.சிவானந்தனும் நினைவுப் பேருரையை நிகழ்த்தும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி பதில் பணிப்பாளர் கு.சாந்தகுமாரும் எமது கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தரக்குறைப்பு:- வட்டாரக் கல்வி அதிகாரியின் பணிப்பில் பின்வருவன மூடப்பட்டன. 1967 இல் 10, 11 ஆம் தரங்கள் மூடப்பட்டு மாணவர்கள் ஸ்கந்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.

❖ 1968 இல் 8, 9 தரங்கள் மூடப்பட்டு மாணவர்கள் ஸ்கந்தாவுக்கு அனுப்பப்பட்டனர்.

❖ தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடன் 01.01.1972 தொடக்கம் 31.12.1973 வரை அரசியல் செல்வாக்கினால் இணைக்கப்பட்டுத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைப் பெயர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம்பப் பிரிவு என பெயர் மாற்றப்பட்டது. இது பாடசாலைகள் சுவீகரிப்பு விதி 5, விதி 8 இன் முரணானது எனவும் கிராமக் கல்வியியலாளரின் எதிர்ப்பினாலும் கல்வி அமைச்சினால் மீளவும் 01.01.1974 தொடக்கம் தனித்தனியே ஸ்கந்தவரோதயக் கல்லூரி எனவும் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை எனவும் (தனித்தனி) இயங்கும்படி அறிவிக்கப்பட்டது.

❖ மிகவும் விரும்பும் பாடசாலையில் (Popular School) 6 ஆம் தரத்திற்கான அனுமதிப் பரீட்சையில் சித்தி எய்தாத மாணவர்கள் மானிப்பாய் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு யாழ். கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்பட்டனர். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் 6 ஆம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புக்கள் மூடப்பட்டமையே இதற்குக் காரணம் என மானிப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.தர்மலிங்கத்திடம் முறையிட்டனர். இதனால் இவ்வூர்ப் பிள்ளைகளை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மேலதிக பிரிவு ஒன்று உண்டாக்கி (தரம் 6இல் ஒரு பிரிவை) கற்பிக்க வைத்தார். எனவே இந் நிலையில் ஒரேற்றர் காலத்தில் இருந்ததுபோல ஸ்கந்தா விளங்க அதே காலத்தில் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் (1-11) வரை வகுப்புக்கள் இருந்ததினால் இவ்வூரின் பின்தங்கிய மாணவரும் கற்பதற்குத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை வசதியாக இருக்கும். இதன் மூலம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை ஒரேற்றர் காலத்தில் இருந்ததுபோல மிகவும் விரும்பும் பாடசாலையாக (Popular School) உயர்ந்த தரத்தில் வைத்திருக்கலாம் என திரு.வி. தர்மலிங்கம் பாராளுமன்ற உறுப்பினரும், இவ்வூர்க் கல்விமான்களும் கருதினர். திரு.தர்மலிங்கம் அவர்கள் உயிருடன் இருக்கும்போது மீண்டும் 6 ஆம் வகுப்பு தொடக்கம் 11 ஆம் வகுப்பு (6-11) வரை வைப்பதற்கான சிபார்சை அனுப்பி வைத்தார்.

❖ இதன் பலனாக 1986 சனவரியில் மீண்டும் தரம் 6 ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன் மூலம் இரு ஸ்தாபகர்களினதும் முகாமையாளர்களினதும், கிராமக் கல்வியாளர்களின் கனவு நனவாகியது.

சாதனைகள்:- ❖ 1956 இல் க.பொ.த. (சா/த) தேர்வில் முதன்முதலில் தோற்றி சித்தி எய்தியவர் தோப்பூர் மூதூரைச் சேர்ந்த ஜெனாப் சி.மு. முகமது முஸ்தபா -அப்துல் காசீம் (இவர் பின்னர் மூதூரில் அதிபராக இருந்தவர்). இவ் வகுப்பில் திரு.மு.அருளையா (ஓய்வு பெற்ற அதிபரும் சங்கீத சபை நிர்வாகச் செயலாளரும் ஆவார்) ஆ.பூமணி, சி.நாகமனோன்மணி இருவரும் இங்கேயே கற்று இங்கு ஆசிரியர்களாக இருந்தார்கள்.

❖ 1957 இல் க.பொத. (சா/த) தேர்வில் சிறப்பாகச் சித்தி எய்தியவர் கந்தரோடையைச் சேர்ந்த ஸ்ரீ.சே.சிவசுப்பிரமணிய சர்மா ஆவார். (இவர் யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபர், இவருடன் மு.அருளானந்தம், இ.வசந்தி, க.ஞானமலர், க.மீனலோஜினி, க.சரஸ்வதி ஆகியோரும் சித்தி எய்தினர்)

❖ 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற (1991 இல் பரீட்சை) பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறாக 7 D, C பெற்றவர் சி.சாயீஸ்வரன். (இவர் இன்று வைத்தியகலா நிதியாக உள் ளார்)

❖ அதே பரீட்சையில் 6D, 2C பெற்ற திரு.செ.சிவானந்தன் (தற்போதைய யாழ்/ரெலிக்கொம் முகாமையாளர்), செல்வன் த.சுதர்சன் (பொறியியலாளர்), செல்வன் யோ.நிர்மலன் (பொறியியலாளர் கனடா) இவர்களுடன் 5 D, 3 C பெற்ற செல்வி யோ.நிரஞ்சலா, செல்வி கு.நிரோஜினி ஆகியோர் (கணக்காளர்களாக விளங்குகின்றனர்).

❖ 1992 க.பொ.த (சா/த) தேர்வில் பா.சித்திரா 5 D, 3C யுடன் சித்தியடைந்தார். (இவர் இன்று கொழும்பில் சட்டத்தரணியாக விளங்குகின்றார்.

❖ 1993 தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன் கணேஸ்வரன் பிரகாஷ் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்று யப்பான் சென்று வந்தவர்.

❖ 1995 க.பொ.த. (சா/த) தேர்வில் செல்வி கெ.பிருந்தா 5D, 2C, எஸ் பெற்று இவர் இன்று பட்டதாரியாவார்.



கந்தரோடை வித்தியாசாலை ஸ்தாபகர் அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர்

❖ 2005 இல் நடைபெற்ற க.பொ.த. (சா/த) தேர்வில் சிறப்புச் சித்தி; 01.செல்வி க.பிரதீபா 10A, 02. செல்வி பு.துவாரகா 9A B, 03. செல்வன் பா.கிரிபரன் 9 A B, 04. செல்வன் ஜெ.இராஜீவன் 8A 2B.

❖ 2002 க.பொ.த. (சா/த) தேர்வில் ம.சுலக்ஷன் 5A 3B 2C

❖ 2003 க.பொ.த. (சா/த) தேர்வில் க.மாதினி 6A 2 B C S

❖ 2007 க.பொத. (சா/த) தேர்வில் சௌ.தாரகா 5A 3 B 2C

❖ 2007 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் த.கம்சா உடுவில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். வலிகாமம் வலயத்தில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.

❖ இணைவிதான செயற்பாடுகளில் தேசிய மட்டம் வரை இவ் வித்தியாசாலை மாணவர்கள் பங்குபற்றினர்.

❖ அன்றைய, இன்றைய அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்களை நன்றியுடன் பாராட்டி சமூகத்திற்குப் பொருத்தமான சிறந்த மாணவர்களை உருவாக்கி பாடசாலை மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்
கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாசாலை (C-1541)

## சமர்ப்பணப் பெருவிழா

(தென்மராட்சி)

சாவகச்சேரி வடக்கு இத்தியடி- ஆதி சிவவீரபத்திர சுவாமி திருக்கோயில் வெளியீடான 'நித்திய கரும விதியும் நமச்சிவாய மாலையும்' என்னும் அருள் நூல் நாளை திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் ஆதிசிவ வீரபத்திர சுவாமி திருப்பாத கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்ய இறையருள் கூர்ந்து ஆலய உற்சவ காலத்தில் சமய தீட்சை பெற்றவர்கள் இலவசமாக இவ் அருட்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சமயதீட்சை பெறும் மாணவர்களுக்கு இந் நூல் அர்ப்பணிப்பாக வழங்கப்படும். (ஓ-102)

## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

புலோலி விக்னேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணியளவில் புலோலி முறாவில் விநாயகர் ஆலய மைதானத்தில் புலோலி மெ.மி.த.கபாடசாலை அதிபர் கே.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச சபை செயலாளர் எஸ்.சந்திரயோகன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-52)

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் இன்று தேர்த்திருவிழா

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஓங்கார மூர்த்தியாகிய பிள்ளையாரின் திருவடிகளை மனதிலே நினைத்தால் தொல்லை, துயரம் முதலானவை நீங்கி நல் வாழ்வு பெறலாம்.

உரும்பிராய் மேற்கில் பரந்தைக் குளம் என்கிற குறிச்சியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கருணாமூர்த்தியான கருணாகரப்பிள்ளையாரை வழிபடுகிறவர்கள் வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனாலேயே "கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்" என்பார்கள் பெரியார்கள், பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் கருணாகரப் பெருமானை விஜயகூழங்கை சக்கரவர்த்தி , கருணாகரத் தொண்டமான், சிவஸ்ரீ கருணாகர ஐயர் உள்ளிட்ட பல அந்தணர் சிரேஷ்டர்கள் வழிபாடு செய்து பெரும் பேறுகளைப் பெற்றவர்கள் என்பது சரித்திரம் .

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்கிற முப்பெருமைகளோடும் கூடி விளங்குகிற இவ்வாலயத்தில் இருக்கிற கல்வெட்டுச் சாசனம் இவ்வாலயத்தின் பழமையையும் ,பெருமையையும் எடுத்துக் கூறுகிறது. ஆராய்ச்சியாளர்களும்,அறிஞர்களும் நன்கு ஆராய்ந்து தங்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார்கள் .

இத்துணை பெருமை வாய்ந்த இவ்வாலயத்தில் இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. திருப்பணிச் சபையினரின் முயற்சியால் கலாபூஷணம் சி.அமரசிங்கம் ஆச்சாரியார் புதிய சித்திரத் தேரை அழகுற அமைக்கும் பணியை ஏற்றுள்ளார்.இத்திருத் தேரைச் செய்து முடிக்க ரூபா 75இலட்சம் வரை தேவைப்படலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த வருடம் புதிய சித்திரத் தேரில் கருணாகரப்பெருமான் திருவீதியுலா வரும் காட்சியை கருணாகரன்அடியார்கள் அவனது அருளாலே நிறைவேற்றிவைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்"

அ.ஈஸ்வரநாதர்
செயலாளர்,
திருப்பணிச் சபை ,
கருணாகரப் பிள்ளையார் கோவில்,உரும்பிராய்.

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி ஜே.எவ்.ஏ. ரூபசிங்கம், யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன், யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் க.ரவீந்திரா, யாழ். இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் என்.சச்சிதானந்தம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கிழகமும் மோதவுள்ளன. (ஓ)

## அதிபர் பதவி வெற்றிடம்

யா/காரை வியாவில் சைவ வித்தியாலய (வகை II) அதிபர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தீவக வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆசிரிய சேவையில் தரம் -1 , தரம் 2-1 ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். அதிபர் சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஆசிரிய சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை தீவக வலயக் கல்விப் பணிமனையில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பவேண்டுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ)

## வாரம் ஒரு தகவல்

### அடையாளம்

"சேர் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியுதா?"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாய்... என்னிடம் படித்த பையன் தானே நீ...?"

"ஆமாம் சேர்! அ... அது...வந்து... ஒரு விஷயம் சேர்,..!"

"என்னப்பா ... இது ... வார்த்தை திக்கித்திக்கி வருகுது... உடம்பும் நடுங்குது...நீ ஏதோ தப்பு பண்ணியிருக்கிறாய்!"

"எப்படி சேர் சொல்றீங்க?"

"நான் சொல்லவில்லை... பஞ்சதந்திரம் சொல்கிறது. ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்கிறது"

"அப்படியா சேர்!"

"ஆமாம்... குற்றம் செய்துவிட்டு பயந்து போய் இருப்பவனுக்கு முகம் வெளிறுமாம்... பேச்சுக் குளறுமாம்... மிரண்டபார்வை... ஒடுங்கிய கர்வம்... தள்ளாடித் தள்ளாடி நடப்ப ான்...முகம் வெளுத்துப் போகும்.. நெற்றியில் வியர்த்துக் கொட்டும்... வார்த்தைகள் திக்கும்... உடல் நடுங்கிக் கொண்டிருக்கும்... பார்வை கீழ் நோக்கிச் செல்லும்... இந்த வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது பஞ்சதந்திரம்! இந்த அறிகுறியெல்லாம் இப்பொழுது உன்னிடம் இருக்கிறது. என்ன விஷயம் சொல்... எதற்காக என்னைத் தேடி வந்தாய்?"

"ப...ப... பத்திரிகை கொடுக்க..."

"என்ன பத்திரிகை?"

"கல்யாணப் பத்திரிகை!"

"யாருக்குக் கல்யாணம்?"

"எனக்குத்தான் சேர்!"

"அடப்பாவி... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய்? சந்தோஷப் படவேண்டிய விஷயமல்லவா இது. பத்திரிகையைக் கொண்டுவா இப்படி...! பொண்ணு யாரு?"

"உ... உங்க மகள்தான் சேர்...!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

14.09.2008
(ஆவணி 29, ஞாயிற்றுக்கிழமை)
சதயம் முன்னிரவு 11.46 மணிவரை
சதுர்த்தசி பிற்பகல் 3.37 மணிவரை
இராகுகாலம்-04.33-06.03 மணிவரை
சுபநேரம்-09.03-10.33 மணிவரை
நடேசரபிஷேகம்

| | |
|---|---|
| மேடம் | இஷ்டசித்தி, தொழில்லாபம், குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல். |
| இடபம் | தொழில் நன்மை, நல்ல செய்தி, மேன்மை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | உடல் உழைப்பு, புதியதிட்டமிடல், பெரியோர் உதவி, இடமாற்றம். |
| கடகம் | எதிர்பாராத அச்சம், காரியதடங்கல், போசனசுகம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | கௌரவமான நிலை, பணவருவாய், எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம். |
| கன்னி | திடீர் பயணம், முயற்சி கைகூடும், தேகநலன், நல்ல மரியாதை. |
| துலாம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, பணவிரயம். |
| விருச்சிகம் | பயந்தசுபாவம், புதிய விடயம், விரும்பாத உறவு, சுபநிகழ்வு. |
| தனுசு | இனிய அனுபவம், புதிய பொருள் சேர்க்கை, நல்ல முயற்சி, வ ாக்குமேன்மை. |
| மகரம் | மாதர் நட்பு, காரிய தாமதம், கடின வார்த்தை, பணவிரயம். |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், போசன நன்மை. |
| மீனம் | உறவினர்சந்திப்பு, மனக்குழப்பம், பிரயாணம், காரிய தாமதம். |

வளவன்

## செயற்குழுக் கூட்டம்

மாவட்டக் கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள், இணைப்பாளர்கள் மற்றும் செயலாளர்களை தவறாது சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## விண்ணப்பங் கோரல்

**ஹற்றன் நஷனல் வங்கியில் பயிலுநர் வங்கியியல் உதவியாளர்**

க.பொ.த (சா.த)த்தில் 5C யுடன் ஆங்கிலம் அல்லது கணிதத்தில் 'D' அல்லது' A 'சித்தி பெற்றிருப்ப துடன் க. பொ.த உயர்தரத்தில் ஒரு 'C'தரத்திலான சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றுள்ளவர்களிடம் இருந்து ஹற்றன் நஷனல் வங்கியில் பயிலுனர் வங்கியியல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை DEM- HR&Ad, Hatton National Bank, No 479, TB Jeyah Mawatha, Head Office என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். மேலதிக விபரங்கள் செப்ரெம்பர் 7ஆம் திகதிய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பிரசுரமாகியது . அயலில் உள்ள HNB கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். (ஓ)

## மாவட்ட கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)


மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் கலை இலக்கிய விழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாவட்ட கலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற கூத்து நிகழ்வு மற்றும் வலயமட்டத்தில் வெற்றிபெற்ற கூத்து நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தேசிய கலை இலக்கிய விழா-2007 அரச கலைவிழா (சித்திரப் போட்டி)-2007 ஆகியவற்றில்வெற்றி பெற்றவர்கள் மற்றும் தமிழ்த் தினப்போட்டியில் தேசிய மாவட்டத்தில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)







உளநல ஆலோசகர் கா. வைத்தீஸ்வரனின் "மூத்தோர் பராமரிப்பு" எனும் நூல் அண்மையில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினால் வெளியிடப்பட்டது. இதில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா உரையாற்றுவதையும், சைவப்புலவர் சு.செல்லத்துரை, சமூகஜோதி ச.இலகுப்பிள்ளை, சட்டத்தரணி சோ.தேவராஜா, வீரகேசரி (ஞாயிறு) பிரதம ஆசிரியர் கலாநிதி வி. தேவராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும்,

கலாநிதி வி.தேவராஜா நூலின் முதற்பிரதியை கொழும்புத் தமிழ்ச்சங்க நிதிச் செயலாளர் சி.சிவலோகநாதனுக்கு வழங்குவதையும், நடுவில் நூலாசிரியர் நிற்பதை இரண்டாவது படத்திலும், சமூக ஜோதி ச.இலகுப்பிள்ளையால் நூலாசிரியர் கௌரவிக்கப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சினித்துளிகள்

தமிழுக்கு வர மறுக்கிறார் இலியானா

◂ கேடி படத்தில் கதாநாயகியாக நடித்த இலியானா, தெலுங்கில் நம்பர் வன் நிலையில், ஒருகோடி ரூபாய் சம்பளம் வாங்குகிறார்.

அதனால் தமிழுக்கு வர ஆர்வம் இல்லாமல் இருக்கிறார். இதற்காக தெலுங்கில் அவரும், பாய்ஸ் சித்தார்த்தும் நடித்த, ஆட்டா என்ற படத்தை தமிழில் டப் செய்கின்றனர்.



◂ அருண் விஜய் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்துக்கு "மலை-மலை" என்றுபெயர்சூட்டப்பட்டுள்ளது. இந்தப் படத் தில், அருண் விஜய் ஜோடியாக பூஜா நடிக்க, வில்லனாக பிரகாஷ் ராஜ் நடிக்கிறார்.

◂ ஜெய்சங்கர்-ஜெயலலிதா நடித்து பல வருடங்களுக்கு முன்பு திரைக்கு வந்த படம், "யார் நீ?" இதே பெயரில் இப்போது ஒரு புதிய படம் தயாராகிறது. நிதிஷ், கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக புதுமுகம் திவ்யாஶ்ரீ நடிக்கிறார். எஸ்.வி. பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தை வெங்கட் ஈஸ்வர் என்ற புதிய ரைடக்டர் இயக்குகிறார்.

◂ விக்ரமன் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் திரைப்படத்திற்கு 'மரியாதை' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப் படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்கிறார் மீரா ஜாஸ்மீன்.

◂ மர்மயோகியில் கமலுக்கு ஜோடியாக நடிப்பதால் வெங்கடேஷிற்கு ஜோடியாக நடிக்க வந்த தெலுங்கு பட வாய்ப்பை உதறியிருக்கிறாராம் திரிஷா.

◂ ஜெயம்ரவி நாயகனாக நடித்து வெளிவரவுள்ள "பேராண்மை" படத்தில் அவருடன் மோதுவதற்காக சில ஹொலிவூட் நடிகர்களுக்கு ஸ்கிரீன் டெஸ்ட் நடத்தியிருக்கிறாராம் இயக்குநர் ஜனநாதன்.

◂ சிம்பு நாயகனாக நடிக்கவுள்ள 'திருமதி போடா திரு போடி' என்ற படத்தின் இயக்குநர், ஒரு டிரம்ஸ் பிளேயராம்.

◂ ஹீரோ தாடி வைத்திருக்க வேண்டும். கையில் அரிவாள் வைத்திருக்கவேண்டும். படப்பிப்பு மதுரையில் நடந்திருக்கவேண்டும். இந்த மூன்றும் இருந்தால் தான் ஒரு தமிழ் திரைப்படம் வெற்றிபெறும் என்று சினிவிழா ஒன்றில் நடிகர் எஸ்.வி.சேகர் விமர்சித்துள்ளார்.

# சினி விமர்சனம்

# தாம் தூம்




நட்சத்திரங்கள்:ஜெயம்ரவி ,ஜெயராம்,கங்கணாராவத் (அறிமுகம்), லட்சுமிராய், கோஜிவ் நிகோவா மரியா (அறிமுகம்), அனுஹாசன், மற்றும்பலர்

கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு, இயக்கம்:-அமரர் ஜீவா

போதை மருந்து கடத்தும் கும்பலை ஒழிக்கும் நாயகனின் சாகசம் தான் கதை.

கௌதம்சுப்ரமணியன் (ஜெயம்ரவி) ஒரு இளம் மருத்துவர். இவருக்கும் இவருடைய உறவினரின் மகளான செண்பா (கங்கணாராவத்)விற்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. திருமணம் நடைபெற 15 நாட்கள் இருக்கும் போது ரஷிய நாட்டில் நடைபெறும் ஒரு மருத்துவ கருத்தரங்கில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் கௌதம் பெறுகிறார். அவரும் அரைகுறை மனதுடன் ரஷ்ய நாட்டிற்கு செல்கிறார். விமான நிலையத்தில் ஒரு இளம்பெண் ( கோஜிவ் நிகோவா மரியா) ணிற்கு உதவுகிறார். அந்த உதவி அறிமுகமாக மாறுகிறது. அவளுடன் ஒரு இரவை நடன விடுதியில் கழிக்கிறார். அந்தப் பெண் மதுவினை அதிகமாக அருந்தி மயக்கமடைய தன்னுடை அறையில் தங்க வைத்துவிட்டு இவரும் உறங்குகிறார்.

மறுநாள் காலையில் அந்த நாட்டு பொலிஸ் அவனைக் கைதுசெய்கிறது. படுக்கையில் அந்தப் பெண் பிணமாகக் கிடக்கிறாள்.கௌதமை பொலிஸ் சிறையில் அடைக்கிறது.அங்கு அவரை கொலை செய்ய முயற்சி நடக்கிறது அதிலிருந்து தப்பி நீதிமன்றில் நிறுத்தப்படுவதற்கு முன் தப்புகிறார்.தன்னை கொலை வழக்கில் மாட்டிவிட்டது யார் என்பதை அங்குள்ள ஒரு சட்டத்தரணி (லட்சுமிராய்) யின் உதவியால் கண்டுபிடித்து தான் நிரபாரதி என்று நிரூபித்துவிட்டு எப்படி தாயகம் திரும்புகிறார் என்பதுதான் திரைக்கதை.

இயக்குநர் ஜீவா மறைந்துவிட்டதால் அவருடைய உதவியாளர் படத்தை தொகுத்திருக்கிறார். உயிரோட்டத்துடன் சொல்லியிருந்தால் கதையின் மையம் கெடாமல் இருந்திருக்கும் .அதைவிடுத்து காட்சிகளை பிளாஷ்பேக் உத்தியில் கையாண்டதால் கதையுடன் பயணிக்கமுடியவில்லை. திரைக்கதையில் லொஜிக் மீறல்கள் அதிகம். செண்பா கதாபாத்திரத்தில் நடிகை கங்கணாராவத் ஒட்டவில்லை. லட்சுமிராய்க்கு நடிக்க வாய்ப்பு இருந்தும் நடிக்கவில்லை. காதல்,கோபம்,பாசம்,ஆவேசம் என தனக்குக் கிடைத்த எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி தன்னை ஒரு சிறந்த நடிகராக பதிவுசெய்திருக்கிறார் நடிகர் ஜெயம் ரவி.

கிரைம் கதையை தொடர்ந்து படிக்கும் வாசகர்களை தவிர மற்றைய ரசிகர்களுக்கு ராகவன் நம்பியாராக வரும் ஜெயராம் தான் வில்லன் என்று கூறும்போது அதிர்ச்சியடைவது உறுதி. படத்தில் ரசிகர்களைக் கவர்ந்த இரண்டு அம்சங்கள். ஒன்று இசை, மற்றொன்று ஒளிப்பதி ஹரீஸ்ஜெயராஜ் தனது வழக்கமான கடும் உழைப்பை வழங்கியிருக்கிறார். எஸ். இராமகிருஷ்ணனின் வசனங்களில் விசேடமாக எதுவுமில்லை. ஸ்ரீநாத்தின் காமெடி நன்றாக இருந்தும் ரசிக்கமுடியாதபடி செய்துவிட்டதில் படத்தொகுப்பாளருக்கு கணிசமான பங்கு இருக்கிறது எனத் தெரிகிறது. ரஷ்யாவின் அளவு ஜீவாவின் கமெராவில் பளிச்செனத் தெரிகிறது.அவரது இழப்பு ஒளிப்பதிவுத் துறைக்கு பேரிழப்பு என்பதை உணரமுடிகிறது. தாம்தூம் இசைப்பிரியர்களுக்கான திரைப்படம்.

# ஷக்தியின் "ஆட்ட நாயகன்"



சிம்பு நடிப்பில் சிலம்பாட்டம் படத்தை தயாரித்து வரும் லஷ்மி மூவி மேக்கர்ஸ் அடுத்து பி. வாசுவின் மகனும், தொட்டால் பூ மலரும் ஹீரோவுமான ஷக்தி நடிக்கும் படத்தை தயாரிக்கிறது. இவருக்கு ஜோடி ரம்யா நம்பீஸன். படத்துக்கு ஆட்ட நாயகன் என்ற பெயர் வைத்துள்ளனர்.

ரொமான்டிக் ஹீரோவாக நடித்து வரும் ஷக்தி. இதில் முதல் முறையாக அக்ஷன் ஹீரோ அவதாரம் எடுக்கிறார். இயக்குனர் விக்ரமனிடம் உதவியாளராக இருந்த கிருஷ்ணா ராம் படத்தை இயக்குகிறார். நாசர்,சந்தானம், ஜீவா, ஆர். சுந்தர்ராஜன், சச்சு ஆகியோரும் நடிக்கின்றனர்.




ஸ்ரீ காந்த் தேவா இசையமைக்கிறார். ஒளிப்பதிவு விஜய் மில்டன் அனை த்துப் பாடல்களை யும் கவிஞர் வாலி எழுதுகிறார்.


'பூவா தலையா' படத்தில் ஷெரீன், கிருஷ்ணகுமார்

லிங்கம் தியேட்டர்ஸ் என்ற நிறுவனம் தயாரிக்கும் புதிய திரைப் படம் பூவா தலையா இந்த படத்தில் கிருஷ்ண குமார் மற்றும் உத யா ஆகியோர்கள் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். மேகா நாயர், ஷெரீன் ஆகியோர் நாயகிகளாக நடிக்க இவர் களுடன் காதல் தண்டபாணி, சாப்ளின், பாலு, கண்ணன், ஸ்வேதா ஆகியோருடன் இயக்குநர் சஞ்சய் ராமும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்திற்காக அண்மையில் ஷெரீன் மற்றும் நாயகன் கிருஷ்ணகுமார் ஆகியோர் நடித்த தீக்கோழி... தீக்கோழி... என்ற பாடல்காட்சி படமாக்கப்பட்டது.இப்படத்திற்கான படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து விட்டது. படத்தின் இசை வெளியீடு சமீபத்தில் நடை பெற்றது. படம் விரைவில் திரைக்கு வருகிறது.

# தெலுங்கில் தமன்னா



முன்னணி நடிகைகள் வரிசையில் ஆர்ப்பாட்டம் இன்றி இடம் பிடித் துள்ளார் தமன்னா 'கேடியில்' தமன்னா இலியானா இருவரும் அறிமுக மானார்கள். படம் பிளாப். தமிழ் சினிமா இலியானாவை தெலுங்குக்கு துரத்தியது. தமன்னா ஒன்றிரண்டு படங்களில் நடித்தார்.

தெலுங்கு சென்ற இலியானாவின் வளர்ச்சி நம்ப முடியாதது. நாலே படத்தில் த்ரிஷாவின் நம்பர் ஒன் இடத்தைக் கைப்பற்றினார். தென்னிந்திய மொழி நடிகைகளில் முதலில் ஒரு கோடி சம்பளம் பெற்றவர் என்ற பெருமையும் இவரை தேடி வந்தது.


தெலுங்கில் முன்னணி நடிகை ஆன பிறகே இலியானாவின் அருமை இங்குள்ளவர்களுக்கு தெரிய வந்தது. கோடியில் சம்பளம் தருகிறோம் என அழைத்துப் பார்த்தார்கள். கேடியில் ஏற்பட்ட காயத்தை மறக்காத இலியானா, தொடர்ந்து தமிழ்ப்பட வாய்ப்பை மறுத்து வருகிறார்.

ஆனால், தமன்னாவின் வழியே வேறு கல்லூரிக்குப் பிறகு ஆனந்த தாண்டவம் படிக்காதவன் அயன். என்று முன்னேறி வருகிறவர் தெலுங்கில் நடிக்கவும் ஆவலாக உள்ளார். மகேஷ்பாபு நடிக்கும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க தமன்னாவுக்கு வாய்ப்பு வந்துள்ளது. கால்ஷீட் கொடுக்க தமன்னாவும் தயார்.

மகேஷ்பாபு நடித்தே நம்பர் வன் இடத்தை த்ரிஷாவும் பிறகு இலியானாவும் கைப்பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# துரை

• ஸ்ரீராஜ் லட்சுமி பிலிம்ஸ் சார்பில் பி.எல். தேனப்பன் தயாரித்துள்ள "துரை" இந்தத் திரைப்படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக கீரத் மற்றும் உமா நடித்திருக்கிறார்கள். இப்படத் தில் கே. விஸ்வநாத் , கஜாலா " விவேக் உள்ளிட்ட பலரும் நடித்தி ருக்கிறார்கள். கதை, திரைக்கதையை நாயகன் அர்ஜுன் எழுத, வசனத்தை ஜி. கே.கோபிநாத் எழுதியிருக்கிறார். ஏ.வெங்கடேஸ் இயக்கி யுள்ளார். லட்சுமிபதி என்னும் ஒளிப்பதிவாளர் இந்தப் படத்தில் அறிமுகம் ஆகிறார். வாலி, தபூசங்கரின் பாடல்களுக்கு டி. இமான் இசையமைத் திருக்கிறார். இப் படத்திற்காக "அக்னி நட்சத்திரம்" என்ற படத்தில் இடம்பெற்ற "ராஜா ராஜாதிராஜா..." ரீமிக்ஸ் செய்யப்பட்டுள்ளது. வன்முறையற்ற சமுதாயத்தை யாரால் உருவாக்க முடியும் என்ற கருவை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்திற்காக நாயகன் அர்ஜுன் தன்னுடைய உடலை வருத்தி நடித்துள்ளார்.


அர்ஜுன், கஜாலா

# நோத்முதல் கோபல்லவா வரை (98)



## ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்

உத்தியோக அங்கத்தவர் வரிசையில் பிரதம சுகாதார அதிபரும் மேல்மாகாண அரசாங்க அதிபரும் இடம்பெறுவாராயினர். உத்தியோக அங்கத்தவர் காலந்தோறும் வெவ்வேறு பகுதிகளின் தலைவராகவே இருந்தார்கள். உத்தியோக அங்கத்தவர் பெரும்பாலும் பின்வரும் 13 உத்தியோகத்தருள் 11 பேர் காலந்தோறும் நியமிக்கப்பெற்றார்கள். அவர்கள் ஆள்பதி அவர்களுடன்

1. படைத்தளபதி
2. குடியேற்றக் காரியதரிசி
3. சட்டத்துறை நாயகம்
4. வருமானப் பகுதித் தலைவர்
5. திறைசேரி நாயகம்
6. மேல் மாகாண அதிபர்
7. மத்திய மாகாண அதிபர்
8. பகிரங்க வேலைப் பகுதித் தலைவர்
9. தென்மாகாண அதிபர்
10. சுகாதார அதிபர்
11. பதிவாளர் நாயகம்
12. சுங்கத் தலைவர்
13. அளவையாளர் நாயகம்

இங்ஙனமாக 1910ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருத்தத்தின் பயனாகச் சட்டசபை யில் அங்கத்துவம் வகித்த பெரியார்கள் வரிசை பின்வருமாறு,

சட்டசபை
21

- உத்தியோக அங்கத்தவர் 11
- உத்தியோகப் பற்றற்றவர் 10
  - *நியமனமுறை–6*
    - கரைநாட்டுச்சிங்களவர்–2
    - தமிழர் –2
    - கண்டிச் சிங்களவர்–1
    - முஸ்லிம்கள் –1
  - *வகுப்புவாத முறை தேர்தல் –4*
    - ஐரோப்பியர் –2
    - பறங்கியர் –1
    - படித்த இலங்கையர் –1

உத்தியோகப் பற்றற் றவர் வரிசை யிலே பத்துப் பேர் இருந்தார்கள். அவர்களுள் தெரியப் பெற்ற பிரதி நிதிகள் வரிசையில் நால்வர் இருந்தனர். அவர்களுள் ***படித்த இலங்கையர் பிரதிநிதியாகப் பொன்னம் பலம் இராமநாதன்*** அவர்கள் சபையை அலங்கரித்தார். நகர்ப் புற ஐரோப்பியர் பிரதிநிதியாய் திரு. அலெக்ஸாண்டர் பெயர்லி இருந்தார். நாட்டுப்புற ஐரோப்பியர் பிரதிநிதியாக திரு எட்வேட் றொஸ்றிங் அவர்கள் இருந்தார்கள். பறங்கியர் பிரதிநிதியாய் இருந்தவர் திரு கெக்டர் விலியம் வான் கயிலன்பர்க் என்பவராவர்.

உத்தியோகப் பற்றற்ற நியமனப் பிரதிநிதிகள் வரிசையில் ஆறுபேர் இருந் தார்கள். அவர்களுள் திரு C.L.ஒபயசேகரா அவர்களும் திரு.அல்பிறட் யோசப் றிச்சாட் த சில்வா அவர்களும் கரைநாட்டுச் சிங்களவர்


### மீள் பார்வை

பிரதிநிதிகளாகவும்; திருவாளர் அம்பலவாணர் கனகசபை அவர்களும், திருவாளர் யோசப் நிக்கலஸ் திரவீரசிங்கம் அவர்களும் தமிழர் பிரதிநிதிகளாகவும் ; திருவாளர் தியடர் பாக்கு றவ்ற் லீவிஸ் முணமலி அவர்கள் கண்டிச் சிங்களவர் பிரதிநிதியாகவும் ;திரு .வப்பிச்சி மரைக்காயர் அப்துல் ரகிமான் அவர்கள் முஸ்லிம் பிரதிநிதியாயும் இருந்தார்கள். இச் சபையில் இருந்த உத்தியோக அங்கத்தவர் பெரும்பாலும் ஆள்பதி அவர்களின் மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான ஆங்கிலேயர்கள். ஆனால் அவர்களுள் *நடு நாயகமாய் பதிவாளர் நாயகமாய் உத்தியோகம் வகித்த பொன்னம்பலம் அருணாசலம்* அவர்களும் இருந்தார்கள். இப் புதிய சபை ஆள்பதியவர்களால் 16.1.1912 இல் கோலாகல வைபவங்களிடையே திறந்து வைக்கப்பட்டது.

இச் சமயத்தில் ஒரு காரியத்தை எண்ணி நாம் பெருமைப்படலாம். திரு.பொன் குமாரசுவாமி அவர்கள் இறவாதிருந்தால் அவரே தமிழரின் நியமன அங்கத்தவராய் இருந்திருப்பர். அப்படியானால் சட்டசபையில் பொன்னம்பல முதலியாரின் மைந்தர் மூவரும் ஒரே சமயத்தில் சட்டசபையை அலங்கரித்திருப்பார்கள்.அவர்கள் முறையே நியமன அங்கத்தவராயும், தெரியப்பட்ட அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும் இருந் திருப்பர் எனலாம்.

**க.சி.குலரத்தினம்**

படித்த இலங்கையர் இலங்கை முழுவதற்கும் ஒரு பிரதிநிதியைத் தெரிவதற்குச் சாதகமாகப் படித்தவருக்கே வாக்குரிமை வழங்கப் பட்டது. அக்காலத்தில் இலங்கைக் குடிசனத்தில் 4% வீத மக்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. படித்த இலங்கையர் பிரதிநிதியாவதற்கு வைத்திய கலாநிதி மாக்கஸ் பர்ணாந்து அவர்கள் வேட்பாளராய் முன்வந்தார். ஆனால் சிங்களப் பெரியார்கள் இராமநாதன் அவர்களையே பெரிதும் அபிமானித்து அவரைப் போட்டியில் ஈடுபடுமாறு விநயமாக வற்புறுத்தினார்கள். (தொடரும்)



பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 46ஆவது ஆண்டு கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினரான பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் விழாத் தலைவரான பி.ஆனந்தநடேசனால் மலர் மாலையணிவிக்கப்பட்டு வரவேற்கப்படுவதையும், விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் வி.விஸ்வலிங்கம் உரையாற்றுவதையும் இளைப்பாறிய பொறியியலாளர் கே.நடனசபாபதி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# தொல்லியல் நோக்கில் (4)

# கந்தரோடையும் கதிரமலையும்

இக்கால மக்கள் நாடோடிகளாகத் திரிந்து மிருகங்களை வேட்டையாடி இயற்கையாகக் கிடைத்த தானியங்களையும், கிழங்கு வகைகளையும் தமது உணாவகப் பயன்படுத்தினர். அத்துடன் மீன்பிடித்தல், நெருப்பின் பயன்பாடு, மட்பாண்டத்தின் பயன்பாடு என்பவற்றையும் அறிந்திருந்தனர். இறந்த மனிதர்களைக் கௌரவமாக அடக்கம் செய்யும் முறையைக் கடைப்பிடித்தனர்.

இக் குகைகளில் காணப் பட்ட உப்பு, சிற்பி என்பன கரையோரத்தில் வாழ்ந்த மக்களுடன் இவர்களுக்கு இருந்த தொடர்பைக் காட்டுகின்றன. தெரணியகலா ராவநல்ல குகையில் காணப்பட்ட சோள விதைகளையும், கல்லாயுதங்களையும் சான்றாகக் காட்டி பிற்பட்ட நுண்கற்காலத்தில் நீர்ப்பாசன விவசாயத்திற்கு முன்னோடியான அம்சங்கள் தோன்றியதாகக் கருதுகிறார். பெலன்-பண்டி -பல என்ற இடத்தில் கிடைத்த எலும்புக்கூடுகளை ஆராய்ந்த கென்னடி தமிழ் சிங்கள வேடர்களோடும் இந்தியக் காடுகளில் வாழும் நாகரிக வளர்ச்சி காணாத பழங்குடி மக்களுடனும் தொடர்புபடுத்தி இலங்கையில் வாழ்ந்து வரும் வேடர்கள் நுண்கற்கால மக்களின் வழித்தோன்றல்கள் என்றார். இவர்களை மானிடவியலாளர் ஒஸ்தோ லோயிட் இனம் எனவும் மொழியிலாளர் ஒஸ்ரிக் மொழிக்குடும்பத்தைச் சாந்தவர்கள் எனவும் கூறுகின்றனர்.

நுண்கற்காலத்திற்குரிய சான்றுகள் தென்னாசியாவில் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதில் இலங்கையின் பண்பாடு தென்னிந்தியாவுடன் சிறப்பாக தமிழகத்துடன் கொண்டுள்ள ஒற்றுமை பற்றி பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தேரி மணற்குன்றப் பிரதேசத்திலும் திருத்தங்கால், திருமங்கலம், மதுரை, குடியம், தருமபுரி, குண்டாறு பள்ளத்தாக்கு முதலான இடங்களிலும் கிடைத்துள்ளன. (குருமூர்த்தி 1974-91, பாலச்சந்திரன் 1994-73,74) சில இடங்களில் கற்காலக் கருவிகளுடன் மட்பாண்டங்களும், மிருக எலும்புகளும் கிடைத்துள்ளன. ஆனால் வட இந்தியாவிலும், இலங்கையிலும் கிடைத்ததுபோல் இக் கால மனித எலும்புக் கூடுகள் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு இப் பண்பாடு பற்றி முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படாதது காரணமாகும்.

வட இந்தியாவை ஒத்த கற் கருவிகள் தென்னகத்தில் காணப்பட்டாலும் தமிழகத்திற்கென சில தனித்துவம் உண்டு. இந்தியாவில் பெரும்பாலும் ஜாஸ்பர், சல்ஸிடனி போன்ற மென்மையும், மினுமினுப்பும் கொண்ட கருவிகள் கிடைத்துள்ளன.

இவ் வகைக் கருவிகள் தமிழகத்தில் அரிதாகவும் சேட் கல்லின் வகையிலான ஆயுதங்கள் அதிகமாகவும் உள்ளன. (சிற்றம்பலம் 1991-24) இந்த அம்சத்தை இலங்கையிலும் காணமுடிகின்றது. திருநெல்வேலி தேரி கல்லாயுதங்களையும் இலங்கையில் கிடைத்த கல்லாயுதங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த அல்சின் திருநெல்வேலியில் காணப்படும் இருபக்க அலகுடைய கல்லாயுதம் தமிழ்நாடு தவிர இலங்கையில் மட்டும் இருப்பதாகக் குறிப்பிட்டார்.(Zeunner & Allchin 1956 .4.20) இவ்வொற்றுமையை ஆதாரங்காட்டி இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் இப் பண்பாட்டின் தோற்ற காலம் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருப்பினும் கி.மு. 8000க்கு முற்பட்டதென்ற பொதுவான கருத்துண்டு. (செல்வகுமார் 1997:141). ஆனால் திருநெல்வேலி தேரி மணற்குன்றுப் பகுதியில் கிடைத்த கல்லாயுதங்களின் காலம் கி.மு.32000 எனக் கூறப்படுகின்றது. (Deraniyagala 1984-105-108) தென்னிலங்கையில் இப் பண்பாடு பல்வேறு கால அளவீடுகளால் கி.மு.28000 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. (Deraniyagala 1990-229-230). இக் காலங்களுக்கு இடையேயுள்ள சிறுவேறுபாட்டையும் கி.மு. 7000க்கு முன் வடஇலங்கையில் தென் தமிழ்நாடும் நிலப்பிரிவால் இணைந்திருந்ததென்ற கருத்தையும் முன்வைத்து நுண் கற்கால மக்கள் தமிழ்நாட்டிலிருந்து தரை வழியாகப் புலம்பெயர்ந்தனர் எனக் கூறப்படுகிறது. (Ragupathy 1987-179) இக்கூற்று சரிவர உறுதிப்படுத்தப்படுமானால் இக்கால மக்களின் புலப்பெயர்ச்சிக்கு உட்பட்ட முதல் இடமாக வட இலங்கையைக் கூறலாம். கந்தரோடையைப் பொறுத்தவரை அங்கு பண்டைய காலக் குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் பலமையங்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும் அங்கு நுண்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சுவடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இதற்கு கந்தரோடை சுண்ணாம்புக் கற் பிராந்தியமாக இருப்பதால் நுண்கற்கால கருவிகளை ஆக்கும் குவாட்ஸ் கல்லின வகை கிடைத்திருக்காது என்பதே பொதுவான கருத்தாகும். இதனால் கந்தரோடையில் மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நுண் கற்கால மக்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பில்லை எனக் கருத இடமுண்டு.

### பெருங்கற்காலப் பண்பாடும் கந்தரோடையும்

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாயிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழந்த தொடக்க கால மக்கள் பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிடர் என்பது உறுதியாகத் தெரியவருகிறது.

இப் பண்பாட் டிற்குரிய சான்றுகள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்டைய வரலாறு வெளி உலகிற்குத் தெரிய வந்ததுடன், இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கும் புது வெளிச்சம் ஏற்பட்டது. பெருங்கற்காலப் பண்பாடு என்பது ஆதிகாலத் திராவிட மக்கள் இறந்தோரை அடக்கம் செய் வதில் பின் பற்றிய ஒரு பண்பாட்டு அம்சத் தைக் குறிக்கிறது. இப்பண்பாட்டு அடக்க முறையில் ஈமச்சின்னங்களை அமைக்க பெரிய கற்களைக் பயன்படுத்தியதால் இது பெருங் கற்காலம் எனவும் இக்கால மக்களது அன்றாட வாழ்வில் இரும்பின் பயன்பாடு அதிகமாக இருந்ததால் இது இரும்புக்காலம் எனவும் அழைக்கப்படுகிறது.

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
***ப. புஷ்பரட்ணம்***

ஈமச்சின்னங்களின் வடிவமைப்பைக் கொண்டு இவை கல்லறை (Cist Burials), கற்கிடை (Dal men oid), தொப்பிக்கல், குடைக்கல், தாழி(Urn), ஈமப்பேழை (Sarcophagus) ,குழியடக்கம் (Pitburial), கல்வட்டங்கள்(Caimcirclrs) , குத்துக் கல்(Menirs) எனப் பலபெயர் கொண்டு அழைக்கப்படும் (Gururaja Rao 1972).

(தொடரும்)



# செல்வச் சந்நிதி மு

# தேர்த் திருவிழா சிறப்ப

## இன்று சந்நிதி முருகனின் இரதோற்சவத் திருவிழா

இன்று தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழாத் திருநாளகும். முருகப் பெருமானுக்கும் தமிழருக்குமிடையேயுள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற் பட்ட தெனலாம். தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு இலங்கையின் தென்பகுதியில் கதிர் காமம், வடபகுதியில் சின்னக்கதிகாமம் என்ற சிறப்புடன் செல்வச் சந்நிதியும் சிறப்பு வாய்ந்த திருத் தலங்களாகும்.


சந்நிதியில் இயற்கை வழிபாட்டு முறை காணப்படுகின்றது. அதாவது அகமம் சராதா வழி பாட்டு மரபினை மருதர் கதிர்காமரின் பரம்பரையினர் மேற்கொண்டுவருகின்றனர். இங்கு வாய் கட்டி பூசை வழிபாடுகள் செய்வது வழக்கம். அன்பு, அருள், பக்தி, அமைதி, மௌனம் ஆகிய மேலான மார்க்கங்களை இப்பூசை வழிபாடுகளில் காணலாம்.

இன்று நடைபெறும் தேர் உற்சவத்தினைக் காண நாலா புறங்களில் இருந்தும் பக்தர்கள் அலை மோதுவார்கள். பக்தர்கள் தூக்கக்காவடி, பாற்செம்பு, பாற்காவடி, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை பக்தி மேலிட்டு நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்கது.

தேரிலே விநாயகரும், வேற்பெருமானும், சண்முகப் பொருமானும் மூன்று தேர்களில் உலாவரும்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது.

இச் சிறப்பு வாய்ந்த சந்நிதி ஆலய தேர் உற்சவ நாளில் கலியூக கந்தனை வழிபட்டு திரு வருள் பெற்று நாம் அனைவரும் சாந்தி சமாதானத்துடன் நலமோடு வாழ பிரார்த்திப்போமாக.

பொருளாளர்
**ஆ. அருணாசலம் - திருப்பணிச் சபை.**




**PC PARK (PVT) LTD.**
the path to computer paradigm

"கணனியுலகில் புதியதோர் பரிணாமம்"
உங்கள் அபிமானத்தை பெற்ற
Pc Park நிறுவனம் தன் நிகரற்ற
சேவையில் என்றென்றும்
உங்களுடன்

Pc Park (Pvt)Ltd
130A, Galle Road,
Dehiwala
T.P.0112714115-
fax:01112713423

Pc Park (Pvt)Ltd
Technical Division
Vaithiya Road, Dehiwala
Hotline:0773951635

Pc Park (Pvt)Ltd
Pointpedro Road,
Nelliyadi.

Pc Park (Pvt)Ltd
633 K.K.S.Road
Jaffna.
T.P.021 222 9581
Fax:021 222 95 81



சந்நிதி முருகா ! உன் பாதம் சரணம் ஐயா !
**ரஜனி பீடா ஸ்ரோர்ஸ்**
உடுப்பிட்டி


## செல்வச் சந்நிதி ஆ

ஈழ நாட்டில் காணப்படும் ஆலயங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆ
உலகில் எவ்விடத்திலும் காணப்படாத தனித்துவமும் திருவருட் தன்மையும்
தொடர்புடையமை பழமைக்கும் மகிமைக்கும் உரியதாகும். மூர்த்தி, த
திருத்தலத்தில் கந்தப் பெருமான் திருவருள் பொழிகின்றான். தெய்வீக கந்த
மகேந்திர புரிக்கு தூதராக அனுப்பிய வேளை வீரவாகுத் தேவரும் அப்பணி
வல்லி நதிக்கரையின் (தற்போது ஆலயத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ளது) கல்லோடைப் பகுதியில் கால்வைத்துச் செ

சூரனிடத்துச் சென்று மீண்டும் திரும்பிய வேளை சந்திக் காலமாகியது. எனவே கந்தப் பெருமானுக்கு சந்திக் கா
அக்கல்லோடையில் கந்தனைப் பூசித்ததால் கல்லோடைக் கந்தன் என்று பின்னாளில் போற்றப்பட்டு வந்தது. கல்லோடையி
சந்நிதி தலமாகப் போற்றி மாற்றம் பெற்றது. இத் தலத்தில் மற்றொரு தெய்வீக நிகழ்வும் இடம் பெற்றது. வியாழ பகவானது
ஐயராவசு என்பவனுக்கு பகவான் பூமியில் பிறக்கும் படி சாபமிட்டார் கந்தர்வனும் பிழையையுணர்ந்து வேண்டு
காட்டிற்கருமையில் யானை உருவெடுத்து வரும் நாளில் சிகண்டி முனி வரால் சாபம் நீங்கப் பெற்றுப் பின் சந்நிதியில் தியா

இதன் பிரகாரம் கந்தர்வனும் யானை உருவில் பல அட்டகாசங்களைச் செய்து வரும் வேளை, சிகண்டி முனிவர் கந்தப்
கொள்ள வேண்டுதல் செய்தார். கந்தப் பெருமானும் பொதிகை மாலையில் இருக்கும் அகத்திய முனிவரிடம் சென்று கற்கு
பின் கதிர்காம முருகனை தரிசிக்க வந்த வேளை, யானையானது இவரைத் தாக்க முற்பட்டது. உடனே சிகணடி முனிவ
நுனியால் வேற்பெருமானை நினைத்து சடாட்சர மந்திரத்தை உச்சரித்து யானையின் நெற்றியில் அடி அது வீழ்ந்து
மோட்ச மளிக்க வேண்டும் என்று வேண்டுதல் செய்ய சிகண்டி முனிவரும் சந்நிதிக்குச் சென்று கந்தப் பெருமானை தியா
அவ்வாறே இச் சந்நிதிக் கல்லோடைப் பதி வந்து தியானத்தில் பூவரச மரத்தருகில் சமாதியடைந்தமையால் இவ்விடம் இஷ்ட சித்திக
பொழிகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சந்நிதியில் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதில் இக் கிராமத்தை சேர்ந்த குருகுல வம்
தோறும்இப்பூவரசு மரத்திலருளும் கந்தவேற் பெருமானைப் பூசித்து தன் தொழிலைச் செய்து வரும் வேளையில் முருகப்
சிறுவனாகக் காட்சி கொடுத்து தன்னிடம் வருமாறு அழைக்க கதிர்காமரும் அங்கு செல்ல மாயமானார். திகைப்புற்று பரித
செய்வாய் என்று பணித்தருள கதிர்காமர் பதைத்து அடியேன் பூசைக்குதகுந்தவர் அல்லர். பூசை முறையும் அறியேன்
கவலைப்படாதே நீ ஏற்றவன்என்றும் உனக்குப் பூசை முறைகளை கற்பிக்கின்றேன் எனக் கூறி கதிர்காமம் கூட்டிச் சென்ற
தேவர் முதல் ஐராவ சுவரை உண்டான பூர்வீக தெய்வத் தன்மைகளைக் கூறி கதிர்காமத்தில் வாய்கட்டி பூசை செய்யு
ஆற்றோரத்தே காட்சியளித்து ஆலம் இலை யில் அமுது படைக்கக் கூறினார். அவரும் அவ்வாறே பூசை வழிபாட்டினை
எதிரே வீற்றிருந்து ஆலய அமைப்பு பூசை வழிபாடுகளையும் எடுத்துரைத்து அருளிவந்தார். நாளடைவில் இறையருளால்
மருதர் கதிர்காமரின் வம்சத்தினரே அக் கோயிலைப பராமரித்து பூசைகளையும செய்து வருகின்றனா. சந நிதியில் கந்தப் பெரு
வந்து அச்சுற்றாடல் முழுவதும் தெய்வ மணம் கமழும் வண்ணமும் அடியார்கள் இறையருளுடன் உடல் களைப்பு மின்றி
செல்லக்கூடிய பல நிறுவனங்களையும்
நடாத்தி வருகின்றனர். நாமும் சந்நிதி
முருகனின் திருவருள் பெற்றுய்
வோமாக.


பத்திரிகைகள் பாடசாலை
உபகரணங்கள் பெற்றுக்கொள்ள
நடவேண்டிய இடம்



**கனன் போட்டோ ரைப்பிங் சேவிஸ்**



தேரேறும் அன்னதானக் கந்தன்
எமக்கருள் பாலிப்பான்
**கவிதா**
பருத்தித்துறை.



**"குதூகல சேமிப்பு கணக்கு"**
(Happy Savings Account) அறிமுகப்படுத்தப்படுகின்றது.

- 14.5% அதிகூடிய வட்டி
- 1000 000/= பெறுமதியான ஆயுட் காப்புறுதி.
- இலவச ATM அட்டை
(பெறுவனவுகள், வைப்புக்கள், எவ்வித கழிவும் இல்லாமல்)
- கட்டுப்பாடற்ற மீளப்பெறுவனவுகள்
- குறைந்த பட்சமாக 1000/= வுடன் ஆரம்பிக்கலாம்.
- 100% அரசாங்க உத்தரவாதம்.

இது பற்றி நீங்கள் இருமுறை சிந்திக்க தேவையில்லை....
உடனே கணக்கை ஆரம்பியுங்கள்...
உயர் வட்டியையும் விஷேட வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்!

NSB
**தேசிய சேமிப்பு வங்கி**
பருத்தித்துறைக் கிளை.



SAVINGS 14%

இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது
"இலங்கையின் அதி சிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி" - ஏசியன் பேங்கர்
சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி
அகக் குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%*மும்
ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும்
வருடாந்த வட்டியாக வழங்குகிறது.
அத்துடன் நீங்கள் எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

- இலவச இணைய வங்கிச் சேவை
- இலவச SMS வங்கிச் சேவை
- 90% வரை துரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதி சிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெற முடியும்
கெபிடல் சேமிப்புக்கணக்குகள் பத்தும் விமான சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது. HNB ஃபிச் றேட்டிங் லங்காவினால் AA (lka)ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.
*12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%
**14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS
HNB



முருகனே முத்துக்குமரனே சரணமையா !!
உங்கள் வயதிற்கும் தேவைக்கும்
பொருத்தமான விதத்தில் மக்கள்
வங்கியில் சேமிப்புக்
கணக்கொன்றை
ஆரம்பித்து வாழ்க்கையின்
வெற்றிப்பாதைக்குள்
பிரவேசியுங்கள்

மழலைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை அனைவருக்கும் தோள் கொடுக்கும் மக்கள் வங்கி


PEOPLE'S AWARDS
மக்கள் மனமறிந்த வங்கி
**மக்கள் வங்கி**

# மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய





# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 14.09.2008



## மஹோற்சவ பிரதம குருவின் அருளாசிச் செய்தி

இலங்காதீபத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் தெற்கே மண்டைதீவு என்னும் தீவில் திருவெண்காடு எனும் புண்ணிய ஷேத்திரத்தில் வீற்றிருந்து, அடியார்களுக்கு வேண்டுவன ஈந்தருளும் சித்தி விநாயகப் பெருமானுக்கு இவ்வூர் மக்களினதும் ஆலய தர்ம பரிபாலகரினதும் பெருமுயற்சியினால், பல வித இடர்கள், இன்னல்களுக்கு மத்தியிலும் எம்பெருமான் திருவருளினால் இன்று இரதாரோகணம் மிகவும் சிறப்பாக இடம்பெறுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகிறோம்.

இம் மங்களகரமான வைபவம் இனிது நடைபெற எம்பெருமான் திருப்பாதங்களை பக்தி சிரத்தையுடன் வணங்கி பக்த கோடிகளுக்கு சகல செல்வங்களையும் எமது திருவெண்காட்டு சித்தி விநாயகப்பெருமான் அருள்வாராக என ஆசி கூறி அமைகின்றேன்.

**பிரதம சிவாச்சாரியார்**
**தி. விவஸ்வத மூர்த்திக் குருக்கள்,**
**தாவடி.**

திருவெண்காடுறையும் விநாயகனே!
தேரேறி அருள் செய்வாய் ஐயா!

திருவெண் காடுறைந் தருளும் விநாயகனே
தேசநலன் காத்தருள தேரேறி வருக.
வருமிடர் போக்கி வாழ்வருளும் வல்லமைகணபதியே
வரமீய்ந் தருளி எமைக்காக்க தேரேறி வருக
அருள் நலம் சேர்த்தருளும் ஆனைமுகத்தவனே
அன்பர்களின் கோரிக்கை ஏற்க தேரேறி வருக
கருணை வள்ளலாய் கவின்பெறு மண்டைதீவுதிருநகரை
காவல் செய்கின்ற கணபதியே தேரேறிவருக!

மதுரகவி . காரை
எம்.பி.அருளானந்தன்

## ஆலய வரலாறு

மண்டைதீவு மையப்பகுதியில் அமைந்துள்ள திருவெண்காடு எனும் குறிச்சி அக்காலத்தில் பற்றைகளும், திருக்கொன்றை, வேம்பு முதலிய மரங்களும் அடர்ந்த காட்டுப்பகுதியாக திகழ்ந்தது.

இக்காட்டில் ஒரு பெரிய ஆல விருட்சமும் காணப்பட்டது. இக் கிராமத்தின் வட பகுதியில் வசித்த மக்கள் தென்பகுதிக்கு இக்காட்டின் ஊடாகவே சென்று வந்தார்கள். அவர்கள் சென்ற இப்பாதை அந்த ஆல விருட்சத்தின் அருகாமையில் அமைந்திருந்தது.

ஒரு நாள் மாலை நேரம் ஐயம்பிள்ளை உடையார் இப்பாதைவழியாகச் சென்று அவ் ஆல விருட்சத்தை கடந்துகொண்டிருக்கையில் தன்னை பின் பக்கத்தினால் ஏதோ ஒன்று பிடித்து இழுப்பது போன்ற பிரமை அவருக்கு ஏற்பட்டது. அவர் திணுக்குற்றுத்திரும்பிப்பார்த்த போது ஆல விருட்சத்தின் கீழ் பெரிய வெள்ளை யானை ஒன்று தன் துதிக்கையை அவரை நோக்கி நீட்டிய வண்ணம் நின்றது. இதைக்கண்ணுற்ற ஐயம்பிள்ளை உடையார் ஆச்சரியப்பட்டார். இதன் போது யானை ஆல மரத்தின் மறுபக்கம் சென்று மறைந்து விட்டது.

இச்சம்பவம் அவருக்கு ஓர்அதிசயமாகவும் மிகுந்த பயமாகவும் இருந்தது. எனினும் அவர் அவ் யானையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் அச் சுற்றாடலில் தேடினார். ஆனால் அவரால் யானையை மீண்டும் காண முடியவில்லை. அவர் இச் சம்பவத்தை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்து அவர்களுடன் கலந்து ஆலோசித்தார். அவர்கள் எல்லோரும் பிள்ளையார் தான் இவ்வாறு காட்சி அளித்தார் என்ற கருத்தை கூறினார்கள்.

இதன் கார்ரணமாகவே அவர் அவ் ஆல விருட்சத்தின் அருகில் பிள்ளையார் ஆலயத்தை அமைத்ததார். அதுவே திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயமாக சிறப்புற்று விளங்குகின்றது. 18ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற வரலாற்றுப்பெருமை மிக்க இவ் ஆலயத்தில் இன்று சித்திரத்தேரில் விநாயகன் வீதியுலா வரும் அற்புதம் நாம் செய்த தவப்பேறேயாகும்.

**பொ. வி.திருநாவுக்கரசு (ஆலய தர்மகர்த்தா)**

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவநேயச் செல்வர்கள் ! சைவமும் தமிழும் செழுமையுறும் மண்டைதீவு பதியில் இன்று திருவெண்காட்டு சித்தி விநாயகன் சித்திரத் தேரில் பவனி வருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருவதாகும். பல்வேறு இன்னல்களை சந்தித்த மண்டைதீவு மக்கள் எத்துணை துன்பம் வந்த போதிலும் திருவெண்காட்டு சித்தி விநாயகன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை இவ் விழா உணர்த்தி நிற்கின்றது.

விநாயகனின் திருவருளும் அடியார்களின் பக்த பிரவாகமும் சேர்ந்து தேர்த்திருவிழா சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர**
**பரமாச்சார்ய சுவாமிகள்**
(நல்லை ஆதீன முதல்வர்)

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியின் ஆசிச் செய்தி

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த போதிலும் மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவம் நடைபெறுவது இறைவனின் திருவருளேயாம்.



மக்கள் பட்ட துன்பங்கள் விலகி இன்ப மயமான சூழ் நிலை தோன்றும் அறிகுறியாக சித்திரத் தேரில் திருவெண்காட்டு விநாய கன் வலம் வரும் அற்புதக்காட்சி அமைகின்றது. எத்தனையோ சிரமங் களுக்கு மத்தியிலும் இத் தேர் மஹோற்சவத்தை சிறப்புற நடாத்தும் ஆலய அறங்காவலர்களுக்கும் ஊர் மக்களுக்கும் விநாயகனின் திருவருள் கிடைக்க வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள்**
**(சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி)**

வெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்
104 ,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2386

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

ஹரிணி காட்வெயர்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

ரூபன் புத்தகசாலை
605, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஈஸ்வரபகவான் & கம்பனி
இல:91 ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 222 2350

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல. 50, 52,54,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 222 2988, 3096
Fax:- 222 2368

# அனலைதீவு - புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தான இரதோற்சவ சிறப்புமலர் - 14.09.2008

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணத்தின் தீவுக் கூட்டத்தின் சைவ மணித்தீவாம் அனலைதீவு. பிள்ளை யார், சிவன், அம்பாள், முருகன், விஷ்ணு, ஐயனார் , பைரவர் என அனைத்து இந்துக் கடவுளர்களின் திருக்கோவில்களை தன்ன கத்தே கொண்டு ஆன்மீக சிந்தனையை வளர்த்து வருகின்றது.

இதில் சிவ பூமியாக விளங்கும் புளியந் தீவு எனும் புனிதபூமி அனலைதீவின் தெற்கே அருள் மணம் வீசும் ஸ்ரீ நாகேஸ்வரன் திருக் கோவிலை தாங்கி நிற்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் , விருட்சம் என ஒரு ஆல யத்திற்கு இருக்க வேண்டிய அனைத்து அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்ற இவ்வாலயத்தில் வரலாற்றில் முதன் முறையாக மஹோற்சவம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. இத் தருணத்தில் ஆல யத்தின் வரலாற்றை நோக்குமிடத்து, நாக வழிபாட்டின் தொன்மை ,கிராமிய வழிபாட் டின் முக்கியத்துவம், ஈழத்தின் அட்டஈஸ் வரங்களில் ஒன்றான நாகேஸ்வரம் பற்றிய வரலாறு, நயினை நாகபூசணி அம்பாளு டைய ஆலயத்திற்கும் அனலை புளியந்தீவு நாகேஸ்வரன் ஆல யத் திற்குமிடையிலான தொடர்புகள் போன்ற பல விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

புளியந்தீவு எனும் புண்ணியச்சேத்திரம் அனலைதீவுடன் இணைக்கப்பட்ட ஒரு சிறு தீவாகும். இதன் தெற்கே நயினாதீவு சுமார் ஒரு கடல் மைல் தொலைவில் அமைந்துள் ளது. இவ்விருதீவுகளையும் பாம்பன் கடல் எனும் தொடுகடல் பிரிக்கின்றது. தென்னஞ் சோலையாகக் காணப்படும் புளியந்தீவு பௌ தீக ரீதியில் பற்றைக்காடாக காணப்படுவ தோடு பாம்புகளின் புகலிடமாகவும் விளங்கு கின்றது. இத்தீவின் தென்புறத்தே கிழக்கு நோக்கியவாறு தோற்றமளிக்கும் ஸ்ரீ நாகேஸ்வரரும் நயினையை நோக்கியவாறு நாக ராஜேஸ்வரியும் அருள்பாலிக்கின்ற னர். மேலும் ஆலய விருட்சமாக அரசமரம் விளங்குவதோடு சிவனுக்குரிய கொன்றை மரமும் புனிதமாக வளர்க்கப்படுகின்றது. இவை தவிர ஆலய தீர்த்தமாக சேது தீர்த் தம் எனும் கடல் தீர்த்தமும் நாகபுஸ்கரணி எனும் திருக்கேணித்தீர்த்தமும் அமையப் பெற்றுள்ளது. நகுலேஸ்வர தீர்த்த கேணி யின் சாயலை ஒத்த மேற்படி கேணியின் மேலதிக நன்னீர் சேது கடல் தீர்த்தத்துடன் கலப்பதால் இது ‘‘சங் கம தீர்த்தம்’’ என அழைக்கப்படுகின்றது.

நாகேஸ்வரன் ஆலய வரலாறுகள் பற்றி பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகளும் வர லாற்று சம்பவங்களும் கூறப்பட்டு வருகின் றன. இவற்றில் காலத்தால் முந்திய நாக வழிபாடு ஈழத்திலும் வேரூன்றிக்காணப் பட்டது அதிலும் சிறப்பாக நயினாதீவு, புளி யந்தீவு போன்ற தீவுகளில் நாகவழி பாடு சிறப்புற்று விளங்கியதாக கூறப்படு கின்றது.

இதன் எச்சமாகவே புளியந்தீவில் நாக தம்பிரான் வழிபாடுகளும் இயற்றப்பட்டு அதுவே பின்னாளில் சிவாலயமாக பரிண மித்தது என்று கூறப்படுகின்றது. மேலும் சிவ ராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் போன்ற விரத புராணங்களை இயற்றிய ‘நா’ வன் ணாப் புலவர் அவர்களால் இயற்றப்பட்ட இலங்கை மான்மீயம் எனும் பா நூலில் நாகேஸ்வர மான்மீயம் என்ற 400 பாக்களின் மூலம் புளியந்தீவு சிவாலயம் பற்றி அறிய முடிகிறது.

இவரது பாடல்களின் பொருள் அடிப் படையிலும் மூதாதையர்களின் செவிவழி கதைகளின் அடிப்படையிலும் புலியேத்தி ஆகிய புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் கோவில் பண்டைய காலத்தில் அட்ட (எட்டு) ஈஸ்வரங்க



ளில் ஒன்றாக விளங்கியமை புலப்படுகின் றது. (இருப்பினும் இவ் நாகேஸ்வரம் நயினை நாகபூசணி ஆலய சூழலில் பண்டைய காலத் தில் காணப்பட்டது என்ற கருத்தும் முன் வைக் கப்படுகின்றது) எனினும் அட்ட ஈச்சரங்கள் ஈழத்தின் நாற்திசைகளிலும் கடலோரமாக அமையப் பெற்று காணப்பட்டமை சிறப்பம் சமாகும்.

பண்டைய அட்ட ஈஸ்வரங்களாக வடக்கே நாகேஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கே தீஸ் வரம், கிழக்கே திருக்கோணேஸ்வரம், மாமாங் கேஸ்வரம் தெற்கே தேவ நுவர தொண்டீஸ் வரம், மேற்கே சிலாபம் முன்னேஸ்வரம், இரத் மலானை நந்தீஸ்வரம் ஆகியனவே அவை யெனக் கூறப்படுகின்றன.

இவை தவிர நயினை ஸ்ரீ நாக பூசணி அம்பாள் ஆலயத்திற்கும் இச்சிவாலயத்திற் கும் இடையிலான இரு தொடர்புகள் கூறப்படு கின்றது. இதில் ஒன்றாக புளியந்தீவில் வசித்த நாகம் ஒன்று தினமும் தனக்கு பூஜிக்கப்பட்ட அல்லது சிவனுக்கு பூஜிக்கப்பட்ட மலர் ஒன் றினை தனது வாயால் கௌவி கடல் வழி யாக வந்து நயினை நாகபூசணியை வழி பட்டு திரும்பி வந்ததாக நம்பப்பட்டு வந்தது. இது தொடர்பான சித்திரங்கள், ஓவியங்கள் இரு ஆலயக் கட்டடங்களிலும் நயினை அம்பாளு டைய சித்திரத் தேரிலும் சிறப்பாக செதுக்கப் பட்டுள்ளது. தவிர இச் சம்பவம் நயினை ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா வில் 11ஆம் திரு விழாவின் ஒரு பகுதியாக சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

அது மட்டும் இன்றி இந் நாக வழிபாட் டிற்கு சான்று பகர்வது போன்று நயினை நாக பூசணி ஆலய கடலோரத்தில் காணப்படும் பாம்பன் கல், கருடன் கல் போன்ற கற் பாறை கள் உணர்த்தும் செய்தியாகும். அதா வது நாகம் அம்பாளைத் தரிசிக்க வழமை போல் கடலில் செல்ல கருடன் பாம்பை வழி மறித்து இரையாக்க எண்ணி பாறையில் உட் கார்ந்து கொண்டதாகவும் அப்பாம்பு பயந்து பிறி தொருகல்லில் பாதுகாப்புத் தேடி சுற்றிக் கொண்டது என்றும் இச் சம்பவத்தை அவ் வழியால் பயணித்த இரத்தினக்கல் வியா பாரி கண்ணுற்று அப் பாம்பை காப்பாற்றி விட்டதாகவும் இதன் பயனாய் அவ் வியா பாரி செல்வந்தனாகி அம்பாளுக்கு திருக் கோவில் கட்டுவித்தான் என்றும் பின்னர் அவ்வாலயம் சிவன் சன்னிதி, அம்பாள் சன்னிதி என இரு சன்னிதிகளையும் மூன்று தேர்களையும் கொண்டு விளங்கின என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறாக வளர்ச்சி கண்ட நிலையில் தான் நாகபூசணி அம்பாள் ஆல யம் போர்த்துக் கேயரால் தகர்க்கப்பட்டது என்று வரலாறு கூறுகின்றது.

இரண்டாவது தொடர்பாக, 1620-24 காலப் பகுதியில் போர்த்துக்கேயரால் நாகபூசணி அம்பாள் ஆலயம் தகர்க்கப்பட்டபோது ஆலய பூசகர்களால் அவ்வாலய அம்பாள் விக்கி ரகம் நயினை வடமேற்கில் ஓர் ஆலமரப் பொந் திலும் நாகதம்பிரான் (சிவலிங்கம்)விக்கிரகம் புளியந்தீவில் அரசமரப் பொந்திலும் மறைத்து வைக்கப்பட்டு வழிபாடுகள் இயற்றப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

இந்த வரலாற்று சம்பவங்கள் தவிர தேவர்கள், வியாக்கிரம பாதர், பதஞ்சலி போன்ற முனிவர்களும் இவ்வாலயத்தினை வழிபட்ட தாகவும் பின்னாளில் பல முனிவர்க ளும் ரிஷிகளும் இத்தீவில் காணப்பட்ட இயற்கை மூலிகைகளை கொண்டு நோய் பிணிகளை நீக்கி வந்ததாகவும், புலிமுகம் கொண்ட அரசன் ஒருவன் தனது சாபம் நீங்க முனிவர்களின்அறிவுறுத்தலின் பேரில் இத் தலத்தில் தங்கியிருந்து சிவனருளாலும் மூலிகை மருந்தாலும் அவனது புலிமுகம் மறைந்து மனித முகம் கிடைக்கப்பெற்றான் என்று கூறப்படுகின்றது.

**க.குமரன்**

இதனாலேயே இத்தீவிற்கு ‘ புலியேத்தி’ என்ற பெயர் தோன்றிற்று என்கின்றார் ‘நா’ வன்னா புலவர். மேலும் இவ்வாலயச் சூழ லில் பிற்காலத்தில் கதிரவேலுச்சாமியார், நயினைக் முத்துக்குமார சாமிச் சித்தர் (புலவர்) போன்றோர் சிவாலயத்தில் தங்கி யிருந்து தியானத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப் பிடத்தக்கது. இதில் முத்துக்குமார சுவாமிப் புலவர் சிவன் மீது கவியும் பாடியுள்ளார். இவ் வாறாக அனலை-புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ் வரன் ஆலய வரலாறுகள் பல கூறப்பட்டு வருகின்றது.

இப்படிப்பட்ட வரலாற்று பின்னணியும் அருள் மகிமையும் கொண்ட இச் சிவாலயத் தில் இதுவரை காலமும் ஞாயிறு தோறும் நாக வழிபாடாக பாம்பிற்கு பால் அபிஷேகமும் ஆவணி ஞாயிறுகளில் சூரிய வழிபாடும் இயற் றப்படுதலானது தமிழர்களின் கிராமிய, தொன்மை வழிபாடுகளை சுட்டி நிற்கின்றன. சிவராத்திரி, ஆனி உத்தரம், திருவெம்பாவை, நடேசரபிஷேகங்கள், பிரதோச விரதங்கள், சோமவாரம் போன்ற சிவ விரதங்கள் மிக விமரிசையாக கொண்டாடப்படுவது சிறப்பம் சமாகும். அதிலும் மார்கழி திருவாதிரை என் பது பல நூற்றாண்டு காலங்களாக யாழ், தீவக மக்கள் அனலைதீவு, நெடுந்தீவு வழி யாக சிதம்பரம் சென்று திருவாதிரை நடனக் காட்சியை கண்டு களித்ததாகவும் கடல் கொ தளிப்பு, காலநிலை சீர்கேடுகளின் போது அங்கு செல்லமுடியாத வேளை இவ்வால யத்தில் அனைத்து மக்களும் கூடி தில்லைக் கூத்தை கண்டுகளித்து வந்ததாகவும் கூறப் படுகின்றது.

இத் திருவாதிரை திருநடனம் இன்று வரை சிறப்பாக இடம்பெறுகின்றது.

திருவெம்பாவை சிறப்பாக இடம்பெற்று வந்தாலும் சிவனுக்கு மஹோற்சவம் இடம் பெறவேண்டும் என்பது அடியார்களின் நீண்ட கால வேண்டுதலாக இருந்தது. அந்த வகை யில் ஆவணி மாத பௌர்ணமியை தீர்த்த திருவிழாக் கொண்டு 10 தினங்கள் மஹோற் சவம் நடத்த தீர்மானித்து அதற்கமைய கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகிய திருவிழாவைத் தொடர்ந்து இன்று ஞாயிற்றுக்கிழமை (14.09.2008) தேர்த் திருவிழா வெகு விமர்சையாக இடம்பெறும் அதேவேளையில் 5ஆம் ஆவணி ஞாயிறு, நடேசரபிஷேகம் ஆகிய இரு முக்கிய சிவனுக் குரிய விசேட திருநாளாகவும் அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்திற்கு விடியலையும் உலகிற்கு அமை தியையும் தந்தருள எல்லாம் வல்ல நாகேஸ் வரி அம்பிகா தேவி சமேத ஸ்ரீ நாகராஜேஸ் வரப் பெருமான் திருத்தேர் ஏறி தீயவற்றை அழித்து நல்லவற்றைக்காப்பதாக அமைய வேண்டும். இவை தவிர காலகாலமாக தொடர் புடையதும் காலவசத்தால் பிரியப் பெற்ற அம்மை அப்பன் தொடர்பை மீண்டும் தொடங்கி வைக்க 1960களில் நயினை, அனலைப் பெரியோர்கள் மேற்கொண்ட ‘‘தெப்பத் திருவிழாவின் போது புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ் வரன் ஆலயத்திற்கு எழுந்தருளுதல் ’’ என்ற தீர்மானம் அப்போதைய காலநிலை சீர் கேடு, இறங்கு துறை பாவனையில் இல் லாமை போன்ற தடங்கலால் நிகழப்பெற வில்லை எனினும் தற்போது புதிய இறங் குதுறை சிவன் ஆலய முன்றலில் அமையப் பெற்றுள்ளதாலும் நவீன இயந்திரப்படகுக ளின் பாவனை அதிகரித்துள்ளமையையும் கருத்தில் கொண்டு இரு ஆலய பரிபாலன சபையினரும் கலந்து ஆலோசித்து புளியந் தீவு நாகேஸ்வரன் ஆலய திருக்கல்யாண வைபவ உற்சவத்தின் போதோ அல்லது நயினை நாகபூசணி அம்பாளின் தெப்பத் திரு விழாவின் போதோ அல்லது இரு ஆலய வருடாந்த உற்சவங்களின் போதோ இறை வன், இறைவியர் எழுந்தருளி அருள் பாலிப்பது இரு ஊரின் , நமது மதத்தின் , நமது நாட்டின் ஒற்றுமைக்கு வழி சமைக் கும் என்பது பக்தர்களின் விருப்பும் பிரார்த் தனையும் ஆகும்.


பலசரக்குப்பொருட்களை நியாய விலையில் பெற நாடவேண்டிய ஸ்தாபனம்
க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
பல்பொருள் வாணிபம்
இல :318 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஐயனார் ஸ்ரோர்ஸ்
1ஆம் வட்டாரம்
அனலைதீவு

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2833 ,222 7144

WESTERN UNION
Money Master
சகல விதமான SLT MAXtalk SLT NetCard
Internet Browsing
FedEx
Warronty 1 & 3 Years With Servise


சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்
சீமாட்டி
புடவைக்கடல்
கிளைகள்: மங்கை சில்க்ஸ்
இல.15,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மொடோன் மாக்கற்
இல.122மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2196 , பக்ஸ்:-222 2102

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
கிருஷ்ணா நகை மாளிகை
இல.09,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிருஷ்ணா அடகுக் கடை
கிளை நிறுவனம்
இல.370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப்புத்தகங்களும் அப்பியாசப் புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
தென்னிந்திய சஞ்சிகைகள் வாழ்த்துமடல்கள் காலத்திற்கு ஏற்ப கலண்டர்கள்த டயறிகள் யாவற்றினதும் உறைவிடமும் இதுவே
யாழ்ப்பாணம் -கொழும்புப் புதினப்பத்திரிகைகள் அனைத்தி னதும் பிரதான முகவர்களும் இவர்களே!
இல:-04 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6693

# முருகன் ஆலய
# ...பு மலர் - 14.09.2008





## ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

சந்நிதிக் கந்தன் எந்நிதியும் தரும் இறை சக்திவேலாய் விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான் முன்னே வர சித்திரத்தேரினில் இவர்ந்து பவனி வருகின்றார்.

திருமால் திருக்குமாரிகள் இருபுறமாக சண்முகப் பெருமான் சடாட்சர (அறு கோண) தேரினில் ஆரோகணித் தருள்பாலிக்கின்ற அற்புத காட்சி சொல்லில் அடங்காது.



பக்திவேர் ஊற்றில் சித்தம்கொண்ட பக்த அடியவர்கள் ஊர் ஊராய்த்திரண்டு கூடித் தேர்வடம் பிடித்து திரு வீதி உலாப் பொலிய இழுக்கிறார்கள். அங்கிதத்துவமாய்த் தேர் குறி ஈடாகிச் சேவலும் மயிலும் கொக்கறக் கூவவும் அகவி ஆடவும் தேர் சந்நிதிக் கந்தவேட் பெருமானைத் தாங்கி அசைந்து ஆடி ஓசை ஒலியான இறை கண்டாமணி ஆர்ப் பவும் தேர்க்கிங்கிணி மணிகள் ஒலிக்கவும் அசைந்து வரு கின்றது. காவடி, கரகம், பாற்குடம், கற்பூர தீபம், பிரதிட்டை, அடி அழிப்பு என்று பக்தர்கள் தம் பிரார்த்தனைகளைப் பஜனை இசை வெள்ளத்தூடு கள்ள மனம் அற ஐம்புல வேடர்பயமறத் தேரைச் சூழ்ந்து அரோகரா முருகனுக்கரோகரா சந் நிதி வேலனுக்கரோகரா என்று வான் முகடு முட்ட தேவர்களையும் வம்மின் வம் மின் என்று வரவழைக்குமாப்போல வாயார வழுத்திக் கந்தவேனின் பக்திப்பனு வலில் திளைத்து நிற்க, யாமிருக்கப் பயம் ஏன் என்று கந்தப்பெருமான் அபயம் அளிப்பதாய் ஆனந்த அனுக்கிரக உணர்வலையை எல்லோர் உள்ளத்துள் ளும் ஊடுருவச் செய்ய இந்நேரம் உலகு அறிய வானொலி அலை வரிசை கந் தவேளின் தேர்த்திவ்வியானுபவத்தைத் திரட்டித் தெரிவிக்க இதை அனுபவிக்கும் பக்த கோடிகள் என்ன தவம் செய்தனர் என்று வியப்பு எம் கற்பனையையும் விஞ்சி நிற்க நிகழும் இத் திவ்விய கைங்கரியம் இனிமேல் அமைய இருக்கும் புதிய தேர் தரிப்பிடங்களையும் புதிதாக அமைக்கப்பட்டு வரும் உள் வீதி சுற்று கொட்டகை கைங்கரியத்தினையும் நிறைவு பெறக்கந்தன் சங்கல்பமே எம் சித்தமாக அகமுக அன்பாலாசி கூறும் அவன் விருப்பை நிறைவு செய்கின்றனம்.

இவன்

**ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர்**

## அன்னதானக் கந்தனுக்கு தேர்

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும் முறையிடும் அடியவர்கள் துன் பம் தீர்ப்பவன் சந்நிதிவேலவன். ஆற்றங்கரையான் என ஆன்றோர்கள் போற்றிய சந்நிதி வேலவனது பேரருட் சக்தியினை அடியவர்களாகிய எம்மால் எடுத்தியம்ப முடியாது. ஆண்டியாய் நிற்கும் வேலவன் என்றும், ஆடம்பரங் கள் விரும்பாததிருத் தலம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. மௌனத்தால் செய்யும் பூசையே இவ்வாலயத்தின் மகிமை.



வேண்டுவோர்ருக்கு வேண்டுவன தரும் சந்நிதி வேலவ னின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று நடை பெறுகின்றது. இத்தேரானது முன்னாள் பாராளு மன்ற இந்து கலாசார அமைச்சரான அமரர் தி.மகேஸ் வரன் அவர்களின் அயராத முயற்சி யினால் வடிவ மைக்கப்பட்டது.இப் பெரிய தேருடன் சேர்த் தே மற்றும் இரு சிறிய தேர் கள் வடிவமைக்கப்பட்டு விநாயகப்பெருமானும் ,வேற்பெருமானும் சண்முகப்பெருமானும் ஒருங்கே பவனி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இத் தேர்த் திருவிழாவிற்கு நாலாதிசைகளிலிருமிருந்து வரும் பக்தர்கள் பாற்காவடி, பறவைக்காவடி, செடில்காவடி, கூத் துக்காவடி, தூக்குக்காவடி, பாற்செம்பு. கற்பூரச்சட்டி போன்ற நேர்த்தி களுடன் வடிவேலவனின் வடம் பிடித்து அருள் வேண்டும் காட்சி கண் கொள் ளாக்கட்சியாகும். மற்ற எல்லா ஆலயங்களையும் விட மகேஸ்வரப்பூசை என்கின்ற பொழுது சந்நிதியில் மிகுந்த சிறப்பு உண்டு. இங்கு வரும் பக்தர்கள் உணவு உண்ணாமல் செல்லும் வழக்கம் இல்லை. இவ் வாலயத்தைச்சூழ பல மடங்கள் அமைந்துள்ளன. இவ் வால யத்திற்கு வரும் பக்தர்களின் நலன் கருதி ஸ்ரீமான் மயில்வாகனம் சுவா மிக ளினால் உருவாக்கப்பட்டு நித்திய அன்ன தானப்பணியை மேற் கொண்ட ஆனந்தா ஆச்சிரமம் இன்று பல்வேறு பரிமாணங் களுடன் சந்நிதியான் ஆச்சிர மாக தொடர்ந்தும் தனதுசேவையை செவ்வனே செய்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

சந்நிதியான் திருக்கடலில் தீர்த்தமாடி வேலவனின் இரதக்காட்சி கணடு பூவரசு விருட்சத்தில் காட்சி கொடுக்கும் கந்தனிடம் முறையிட்டால் எம் பூர்வ வினை கள் தீர்ந்து புண்ணியம் சேரும் என் பது சந்நிதி வேலவன் அடி யவர்களின் நம் பிக்கை. இப்படியாக பலவரலாற்றுச் சிறப்புகளுடன் கூடிய சந்நிதி முருகன் அன்னாதான கந்தன் மட்டுமல்ல அருளைப் பொழிகின்ற , அறிவைத் தரு கின்ற நோய்களைத் தீர்க்கின்ற அல்லல் களை அக்கற்றுகின்ற கந்தனு மாவான். அற்புதஞானம் நிறைந்த வேலவனின் புதிய விழாக் காலத்தில் பக்தி யோடு தொழுதுபயன்பெறுங்கள் வேலவனே ! எங்கள் எல்லோரது வேதனை களையும் தீர்த்து வெற்றியோடு நாம் வாழ நல்லருள் தா என்று வேண்டுங்கள். முருகன் அடி யார்களே! நாங்கள் ஒவ்வொருவரும் ஆற்றங்கரை கந்தனை வழிபட்டு இம்மை, மறுமை பலன்களைப் பெறுவோமாக.

**செ.மோகனதாஸ் சுவாமிகள்**

சந்நிதியான் ஆச்சிரமம் ,தொண்டைமானாறு.

## ஆலய வரலாறு

...பு மிக்க ஆலயமாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது ...ன்மையும் கொண்டுள்ள இவ்வாலய வரலாறு கந்தபுராணத் துடனும் ...மூர்த்தி, தலம் ,தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற இத் ...ப்வீக கந்த புராணத்தில் கந்தப் பெருமான் வீரவாகு தேவரை சூரனிடம் ...ம் அப்பணியை சிரமேற்கொண்டு இலங்கயின் வட பால் அமைந்த ...வைத்துச் சென்றார். இங்கு அப்பாதச் சுவடு இன்றும் காணப்படுகிறது. ... சந்திக் காலப் பூசை செய்ய வேண்டிய பணி மனதில் தோன்றி ...லோடையில் சந்நிதானம் அமைத்து சந்திக் காலப் பூசை செய்தமை ...பகவானது கட்டளைப்படி ஒழுகத் தவறிய தேவலோக கந்தர்வானான ...வேண்டு த...ல் செய்ய பகவானும், 'நீ பூமியில் பிறந்து கதிர்காமக் ...யில் தியானம் செய்து முத்தியடைவாய் !' என்று அருள் பாலித்தார். ...ரிவர் கந்தப் பெரு மானிடம் இசைநுணுக்கங்களைப் பற்றி தெரிந்து ...ன்று கற்குமாறுபணித்தருளினார். அவரும் அங்கு சென்று கற்றுப் ...டி முனிவர் அதன் வரலாற்றை உற்று நோக்கிய பின், வெற்றிலை ...வீழ்ந்து ...ந்தர்வனாகியது. உருமாறிய கந்தர்வன் தனக்கு ...னை தியா...ம் செய்து முத்தியடையப் பணித்தார் அவனும் ...ஷ்ட சித்திகள் கிடைக்கப் பெற்று பெருமானின் திருவருளைப்

...ருகுல வம்ச முருக பக் தரான மருதர் கதிர்காமர் நாள் ...ல் முருகப் பெருமான் இவரை ஆட் கொள்ள நினைத்து ...புற்று பரிதவித்த கதிர்காமரை இவ்விடத்தில் எனக்குபூஜை ...அறியேன் என்று மனம் நொந்தார். உடனே பெருமான் ...டிச் சென்றார். செல்லும் வழியில் இத் தலத்தில் வீரவாகு ...ச செய்யும் மௌன பூசையைக் காண்பித்து மீண்டும் ...பாட்டினை மேற்கொண்டார். நாளடைவில் கதிர்காமர் நேர் ...யருளால் ஆலயம் வளர்ச் சியடைந்துள்ளது . இன்றும் ...கந்தப் பெருமான் கருணையினால் பல அன்பர்களும் முன் ...ப்பு மின்றி


செல்வச் சந்நிதி முருகன் திருவருள்
அனைவருக்கும் கிடைக்கட்டும்
மொடோன் ஸ்ரோர்ஸ்
நெல்லியடி.

தேரில் ஏறும் முருகா ! எமக்கு அருள் தாரும் முருகா!
ராஜலக்ஷ்மி மல்ரி பலஸ்
நெல்லியடி, கரவெட்டி.

இன்று இரதபவனி வரும் சந்நிதியான் எம் மனக்குறை தீர்த்தருள்வான்!
அருள் நாயகி
நெல்லியடி.

Sunvigki Textile
சன்விக்கி ரெக்ஸ்ரைல்
பிரதான வீதி, நெல்லியடி.
Main Street, Nelliady

Yaso Tex
Specialist in Wedding Sarees & Salwar Kamez
Main Street, Nelliyadi.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
உலகெங்கும் இருந்து பணத்தைப் பெற விரைவான வழி
கணேசா ஏஜென்சி
இல:-329 B பிரதான வீதி, பருத்தித்துறை.
தெ.பே.021 2263928
Customer Service Agent
கவிதா ரேடர்ஸ் பத்திரிகை முகவர் சி.சத்தியமூர்த்தி


நெல்லை சில்க்....
Nellai Silk
LATEST DESIGNS OF TEXTILES
தெ.பே.021 2263207
Main Street, Nelliady.

உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அடித்தளம்
"ரண் கெகுளு" கணக்கின் மூலம் உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்கான நிதி அத்திவாரத்தைக் கட்டியெழுப்புங்கள். இக்கணக்கு பாதுகாவலருக்கான இலவச ஆயுட் காப்புறுதி, பிள்ளைகளுக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்பீடு, 5ஆம் ஆண்டு மற்றும் பல்கலைக்கழகப் புகுமுக பரீட்சை களுக்கான புலமைப்பரிசில்கள் போன்ற பல தனித்துவமான நன்மைகளையும் கொண்டுள்ளது.
BOC
BANK OF CEYLON
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

ஆசியாவில் முதன்மை விருது பெற்றதும் இலங்கை காப்புறுதித் துறையில் அசைக்க முடியாத தலைவனாக திகழ்வதும்
Ceylinco Insurance Company Limited
நெல்லியடி.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ளதங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
தரன் நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்
தரம்நாடுவோர்தவறாமல் நாடுமிடம்
கிளை :1 பிரதான வீதி, பஸ்நிலையம்அருகாமை, பருத்தித்துறை.
கிளை :2 ம.மா.வி.வீதி நெல்லியடி, கரவெட்டி.

உங்களது நயம் நம்பிக்கை நாணயம் உள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்தஸ் தாபனம்
ஜெய துர்க்கா ,நகைத் தொழிலகம்
தங்கப்பவுண்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்
ஸ்ரேசன் றோட், மல்லாகம்



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 30 Pages 4 Sunday, 14 September 2008


# நிரந்தர இருப்பிடக் கனவுகளுடன் பூந்தோட்ட நலன்புரி நிலைய மக்கள்!

## பேசும் படம்



இரு தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் திருத்தப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டில்களை நோக்கிச் செல்லும் ஒரு தாயையும் குழந்தையையும் படத்தில் காணலாம்.

35 குடும்பங்கள் கடந்த நான்காம் திகதி மீண்டும் அங்கு குடியமர்த்தப்பட்டன. இந்த குடும்பங்களிலுள்ளோர் ஆரம்பத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இரண்டாவது விபத்தில் பாதிக்கப்பட்ட 24குடும்பங்கள் சிதம்பரபுரம் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூந்தோட்டம் நலன்புரி முகாமில் கடந்த ஒரு மாதகாலத்திற்குள் ஏற்பட்ட இரு தீ விபத்துக்களினால் இருப்பிடங்களை இழந்து கடந்த பல வாரங்களாக பாடசாலைகளில் வாழ்ந்த அம் 35 குடும்பங்கள் மீண்டும் அதே இடத்தில் புதுப்பிக்கப்பட்ட தற்காலிக கொட்டில்களிற்கும் 24 குடும்பங்களும் அதே தினம் சிதம்பரபுரம் முகாமுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

முதல் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் பூந்தோட்டத்திற்கும் இரண்டாவது தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சிதம்பரபுரத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மாதம் 4ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. ஒரு மாதகாலத்திற்குள் இரண்டு தடவைகள் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி முகாமில் ஏற்பட்ட தீவிபத்து அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையின் உள்நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக வடக்கிலிருந்து 1990 களில் இடம்பெயர்ந்த மக்கள் இன்றுவரை நலன்புரி முகாமிலேயே வசித்து வருகின்றனர். அவர்களுக்கென்று வவுனியாவில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களே பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரிநிலையங்கள்.

சுமார் 593 குடும்பங்கள் ( 2174 தனிநபர்கள்) வாழும் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் ஆரம்பத்தில் ஏற்பட்ட தீவிபத்து தற்செயலாக நடத் தப்பட்டதாக கருதப்பட்ட போதி லும் கூட இரண்டாவது தடவையாக ஏற்பட்ட தீவிபத்து வேண் டுமென்றே செய்யப்பட்ட சதித் திட்டமாக இருக்கலாம் என்று சந்தேகம் தற்பொழுது எழுந்துள்ளது.



சுமார் 15-20 வருடகாலமாக இந்த மக்கள் ஒரே இடத்தில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் அந்த இடங்கள் பழுதடைந்து வாழ்வதற்கு கஷ்டமான சூழ்நிலையில் இருந்தமையினால் புதிதாக அமைத்துக்கொள்வதற்கு செய்த சூழ்ச்சியாக இருக்கலாம் எனவும் இதுகுறித்த விசாரணைகளை மேற்கொள்ளு மாறு பொலிஸாருக்கு கூறியதாகவும் வவுனி யா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் தெரிவித்தார். தீ பிடித்தெரிந்த சாலையில் ஒருவரும் இருக்கவில்லை என்றும் திடீரென தீப்பற்றி எரிந்தது என்றும் அது விபத்தாக இருக்கமுடியாது என்றும் இரசாயனப் பொடி போன்ற ஏதோ ஒன்றைப் போட்டதாலேயே தீ பிடித்ததாகவும் இந்த விபத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதபோதிலும் தாங்கள் செய்வதாகவே அரசாங்க அதிகாரிகள் கருதுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

2006ஆம் ஆண்டிலும் இந்த நலன்புரி நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இந்த மககளது பாதுகாப்புக்கருதி பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற அரசாங்க அதிபர் பணியகம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. அமைப்புக்கள் என்பன ஆலோசனை நடத்தி சிதம்பரபுரம் பிரதேசத்தில் நலன்புரி நிலையத்துக்கு அருகாமையிலுள்ள காணிகளில் மக்களுக்கான தற்காலிகக் கொட்டில்களை அமைத்துக்கொடுப்பதாகவும் இதுகுறித்து தமது கருத்துக்களை கூறுமாறு மக்களிடம் அந்த அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன. ஆரம்பத்தில் அதற்கிணங்க மக்கள் மறுநாள் நடைபெற்ற கூட்டத் தில் தம்மால் சிதம்பரபுரம் செல்லமுடியாதென்று தெரி வித்திருந்தனர். தற்போது அதற்கிணங்கி மீண்டும் பல குடும்பங்கள் சிதம்பரபுரம் செல்லும் அதே வேளை காலி யாக இருந்த குடில்களிலும் சில குடும்பங்கள் குடியேறி யுள்ளனர். தற்போது காணப் படும் நாட்டு நிலைமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு பார்த்தால் அவர்கள் சிதம்பரபுரம் செல் வதே சாலச் சிறந்தது என்கிறார் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்யத்தின் தலைர் சிங்கம். இனியும் முகாம் வாழ்க்கை வேண்டாம் என்ற மக்கள் கருத் திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப் போவ தாக அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். ஆனாலும் தமக்கு மிகக் குறைவான அளவே நிவார ணப்பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ள மையினால் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவித்தனர்.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்"
திட்டமானது இலங்கையின்
அசாதாரண
சூழ் நிலைகளினால்
இடம்பெயர்ந்து
முகாங்களில் வாழும்
மக்களுக்காகவும்.
மீள்குடியேறி
உள்ளவர்களுக்காகவும்
தகவலை வழங்கும்
பரந்துபட்ட மனிதாபிமான
செயற்திட்ட அமைப்புக்களின்
ஓர் அங்கமாகும்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

*மீண்டும் வாழ்வோம்*
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும் உங்கள்
படைப்புக்களையும் எமக்கு எழுதி
அனுப்புங்கள். அவற்றை
மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.


த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்- info@lifeline srilanka.com

## வாழ்வின் வண்ணங்கள்



கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்து முகாமில் வசிக்கும் 13 வயதானரவி சுவிதா தனது இடம்பெயர்வு மற்றும் முகாம் வாழ்க்கையின் அனுபவங்களை கவிதை வரிகளாக எமது வாழ்வின் வ்ணாங்களில் பதிந்து கொள்கிறார்.

**அலைவழி க டந்துவந்தோம்
அகதியாக அலைந்துவந்தோம்
உறவினைப் பிரிந்து வந்தோம்
உரிமைகேட்டு நொந்து வந்தோம்
நாம் தானே... உண்மை இதுதானே!
துன்பச் சுமைதானே...
ஒரு விடியலுகாய் ஏங்குகிறோம்
முறைதானோ...!
உயிரினை இழந்துவந்தோம்
தனித்தனியாய்சிதைந்து வந்தோம்
மானத்தைக் காத்து வந்தோம்
மரணபயம் கொண்டு வந்தோம்
நாம்தானே...உண்மை இதுதானே...!
ஒரு விடியலுக்காய் ஏங்குகிறோம்
முறைதானே...
ஆயிரம் கனவு கண்டோம்
அத்தனையும் சிதறக்கண்டோம்
தாயென ஓடிவந்தோம்
நோய் கொண்டு வாடுகிறோம்
நாம் தானே... உண்மை இதுதானே..!
துன்பச்சுமைதானே...!
ஒருவிடியலுக்காய் ஏங்குகிறோம்
முறைதானே...!**



*மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம்.வானொலியூடாக சனிக்கிழமைகளில் காலை 6மணிமுதல் 8மணிவரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம்.வானொலியூடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30 மணிமுதல் 2மணிவரையும் புத்தளம் பிரதேசத்தில் அதுர் எவ்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் 6.45 முதல் 7.15மணிவரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesafpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.*

# காவோலைகள்

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதியில் சமூகச் சீர்திருத்தத்திற்கு அவசியமான பல விடயங்கள் மக்களிடத்தில் விரைவாகவும், தெளிவாகவும் சென்றடையக் கூடிய வகையில் நாடக வடிவில் தொகுத்து குறுநாடக் தொடராக ஒலிபரப்புகிறோம்.

பொதுவாகவே இன்றைய நாளில் சமூகத்திற்கு தேவைப்படும் கருத்துக்கள் தான் உங்கள் கதைகளில் கருப்பொருட்களாக அமைகிறது.

இந்தவார உங்கள் கதைகளில் காவோலைகள் என்ற குறுநாடகம் ஒலிபரப்பானது. காவோலைகள் வயோதிபர்களின் இறுதிக்கால வாழ்க்கை பற்றியதாக அமைகிறது. பிள்ளைகள் நல்ல நிலைமைகளில் இருந்தும் பெற்றோர்கள், முதியோர் இல்லங்களில் வாழும் வேதனைக்குரிய சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணமேதான் உள்ளன.

பெற்றுவளர்த்து பிள்ளைகளின் கனவுகளை நினைவாக்கும் பெற்றோரை அவர்களது இறுதிக் காலங்களில் சுமையாக நினைத்து தள்ளி வைக்கும்பிள்ளைகள் நிச்சயமாக கண்டிக்கப்படவேண்டியவர்கள்தான்.

பெற்றோருக்காக நாம் செய்யும் விடயங்களை வெறுமனே கடமைக்காக என்று நினைக்கக் கூடாது. தனது பெற்றோர் என்ற உரிமையுடனும் அன்புட னும் செய்யவேண்டும். இந்தக் கதையில் வரும் குடும்பத்தில் ராம், மனைவி சுமதி, ராமினி தாய் மூவரும் தான் முக்கிய பாத்திரங்கள் சுமதிக்கும் அவளது மாமியாருக்கும் இடையில் ஏற்படும் சில முரண்பாடுகளால் மாமியார் மனமுடைந்து தன் மகன் ராமிடம் தன்னை வயோதிபர் இல்லத்தில் கொண்டு போய் விடுமாறு கூறினார்.அத்தோடு சுமதி தானும் பிள்ளைகளும் அந்த வீட்டில் சுதந்திரமாக இருக்கமுடியவில்லை என்று ராமிடம் கூறினார். தனது பிள்ளைகளை மாமியார் கண்டிப்பதாகவும் அதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும் கூறினாள். மனைவியைப் பற்றி நன்கு தெரிந்த ராம் தாய்க்கு சார்பாகவே சுமதியுடன் பேசுகி றார். இதனால் கணவன் மனைவிக்கிடையில் மனக்கசப்பு ஏற்படுகிறது.சுமதி தன் தாயை மதிக்காமல் வயதான காலத்தில் மனம் நோகும்படி நடந்துகொள்வதை நினைத்து ராம் மனம் வருந்துகிறார்.

அதேநேரத்தில் தாயார் வீட்டில் தான் அனுபவிக்கும் கஷ்டங்களைப் பற்றி ராமிடம் கூறினார். அந்த வீட்டில் உள்ள தளபாடங்களை போலவே தானும் இருப்பதாகக் கூறினார். இறுதியில் தாயின் விருப்பத்திற்கு அமைய ராம் தாயை முதியோர் இல்லத்தில் கொண்டுபோய் விடுகிறார். இங்கு மகன் ஆதரவாக இருந்தும் மருமகளின் செயற்பாடுகளால் அந்தத் தாய் முதியோர் இல்லத்திற்குச் செல்கிறார்.ஆனால் ஒரு வகையில் ராமின் தாய் தன் மகன் தன்மேல் வைத்திருக்கும் அக்கறையை நினைத்துப் பெருமைப் படுகிறார். இதற்கு மாறாக சில இடங்களில் பிள்ளைகளே பெற்றோரை முதியோர் இல்லங்களிற்கு அனுப்பிவைக்கும் சம்பவங்கள் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இதற்கு முக்கியமான காரணம் புரிந்துணர்வு இல்லாமைதான்.குடும்பத்தில் உள்ள சிறியவர்களும் சரி,பெரியவர்களும் சரி ஒருவரை ஒருவர் புரிந்து நடக்கவேண்டும். இளையவர்கள் முதியவர்களை பாரமாக நினைக்கக் கூடாது.

இவர்களை அன்புடனும் அரவணைப்புடனும் பாதுகாத்து அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற்று உங்கள் எதிர்கால வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

அடக்கமாய் இருங்கள்; ஆனால் கோழையாய் இராதீர்கள்.

– சுவாமி இராமதாசர்

வலம்புரி

## இலங்கை அரசை தலை குனியச் செய்யும் வன்னி மக்களின் மறியல் போராட்டம்

வன்னியில் இயங்கிய அரச சார்பற்ற அமைப்புக்களை வெளியேறுமாறு அரசு பணித்த உத்தரவையடுத்து, அந்த அமைப்புக்கள் வன்னியை விட்டு வெளியேற முற்பட்டபோது வன்னி வாழ் மக்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

எங்களை விட்டு போகாதீர்கள். நாங்கள் யுத்தத்தின் கொடூரத்திற்குள் சிக்குண்டு அவல வாழ்வு வாழ்கின்றோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் எங்களை விட்டுப் போவது நியாயமா? என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களை வெளியேற விடாமல் ‘எங்களை விட்டுப் போகாதீர்கள்’ என கேட்கும் மக்களுக்கு அந்த அமைப்புக்கள் என்ன பதிலைக் கூறப் போகின்றன.

இந்த அமைப்புக்கள் இதுபோன்ற சம்பவத்தை எங்குமே கண்டிருக்க மாட்டார்கள். மனித நேயத்தைப் பாதுகாப்பதற்காக–பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இயங்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு வன்னி மக்கள் மனித நேயத்தின் அடிப்படைப் பண்பை உணர்த்தி நிற்கின்றனர்.

தொண்டு செய்ய வந்த நீங்கள் அரசு சொல்லுகின்றது என்பதற்காக எங்களை விட்டுப் போவதாயின் இதுவரை வன்னியிலிருந்து செயற்பட்டதன் நோக்கம் என்ன?

இதுவரை காலமும் வன்னியில் இயங்கி விட்டு இப்போது அரசு யுத்தத்தைத் தொடர்ந்துள்ள போது நாங்கள் இடம்பெயர்வு என்ற படலத்தில் சிக்குண்டிருக்கும்போது நீங்கள் உங்கள் மனித நேயத்தை விட்டு விட்டு–விற்றுவிட்டு போகின்றீர்களா? என்ற நியாயமான கேள்வியாக வன்னி மக்களின் மறியல் போராட்டம் அமைந்துள்ளது.

வன்னி மக்கள் தம்மை விட்டு வெளியேறும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை வெளியேற வேண்டாம் எனக் கேட்டு அவர்களைத் தடுத்து நிறுத்தும் செயலானது இலங்கை அரசை சர்வதேசத்தின் மத்தியில் தலைகுனிய வைத்துள்ளது.

அரசு காப்பாற்றுமாக இருந்தால் வன்னி மக்கள் சர்வதேச தொண்டு நிறுவனங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய தேவை ஏற்படமாட்டாது.

எனவே வன்னியில் சர்வதேச தொண்டு நிறுவனங்களைத் தடுத்து நிறுத்தும் மக்கள் உலகுக்குக் கூறும் செய்தி, எங்களைக் காப்பாற்றுங்கள் என்பதாகும்.

எங்கே மனித நேய அமைப்புக்களிடம் மனித நேயம் இருக்கின்றதா பார்ப்போம்?

# அரச சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் மாற்றம்

## 2009 முதல் அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரச சேவைகளில் ஆட்களைச் சேர்ப்பதற்காக நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் 10 சேவைகளுக்கு ஆட்களை சேர்ப்பதற்காக இதுவரையிலும் 39வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு முதல் சகல சேவைகளுக்கும் 19 வினாத்தாள்களே வழங்கப்படும். அதுவும் ஒரே நாளில் பரீட்சை நடத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

அரச சேவைகளில் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக இதுவரை காலமும் தனித் தனியாக போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. அதனால் புதிய பட்டதாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். அவற்றைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் 10 சேவைகளுக்குமாக ஒரே நாளில் பரீட்சைகளை நடத்துவதற்கும் அதற்காக 19 வினாத்தாள்களே வழங்கப்படும் என்றும் கூறினார். ஓ

# இலங்கை மனித உரிமைகளின் நிலைமையை மேம்படுத்த ஐ.நா.விடமிருந்து உதவியைஎதிர்பார்க்கிறது

## உயர்ஸ்தானிகரிடம் சமாதான செயலக பணிப்பாளர் கோரிக்கை

மனித உரிமைகளின் நிலையில் உயரிய தரத்தைப் பேணுவதற்கு எதிர்பார்க்கின்ற போதிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அது சிரமமான விடயமாகியுள்ளது. எனசமாதான செயலக பணிப்பாளர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாட்டின் மனித உரிமைகளை மேம் படுத்துவதற்கு ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் உதவியை எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவின் புதிய உயர் ஸ்தானிகர் நவநீதம்பிள்ளைக்கு வாழ்த்துதெரிவித்து சமாதான செயலகப் பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, எம்மால் இயன்ற வரை நாட்டிலும் மற்றும் ஜெனிவாவில் உள்ள எமது நிரந்தரத் தூதுவர் ஊடாகவும்இலங்கை மனித உரிமைகளுக்கான புதிய உயர்ஸ்தானிகரின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவோம்.

நாட்டின் மனித உரிமைகள் நிலைமையிலும் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதை நாம் இனங்கண்டுள்ளதோடு அது தொடர்பில் உயர்ஸ்தானிகரின் உறுதியான உதவியையும் எதிர்பார்க்கிறோம். பல நாடுகள் ஏற்கனவே உணர்ந்துள்ளது போன்று நாங்கள் மனித உரிமைகளில் உயர்ந்த தரப்பாடுகளைப் பேணவிளைந்த போதிலும் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அது ஒரு கஷ்டமானகாரியமாகவே உள்ளது.

ஆயினும் நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் நலன் பேணுவதில் நாம் ஒப்பீட்டளவில் அதி சிறந்ததொரு நிலையில் உள்ளோம். குறிப்பாக தற்காலிகமாக பயங்கரவாத சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள எமது பிரஜைகளுக்கும் சமூக உதவிகளை எம்மால் தொடர்ந்து செய்ய முடிகிறது.

இத்தகைய நிலைமைகளில் உலகில் வேறு எப்பாகத்திலும் இப்படியாக இலவச மருத்துவ மற்றும் கல்வி வசதிகள் வழங்கப்படுவதில்லை என்பது எமது நம்பிக்கையாகும். எனவே உயர்ஸ்தானிகர் குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரப் பராமரிப்பு, கல்வி மற்றும் சந்தர்ப்பங்கள் பற்றிக் குறிப்பிட்ட போது எமது சகல பிரஜைகளுக்கும் அவ்வாறான நன்மைகளை வழங்க நாம் முயற்சி எடுத்துள்ளோம் என்பது எமக்குத் திருப்தியளிப்பதாகவுள்ளது.

பாரிய பாதுகாப்பு ஆதங்கங்கள் காரணமாக சில தவறுகள் ஏற்படவே செய்துள்ளன. எமது மக்கள் அனைரும் ஒன்று சேர்ந்து முன்னேறிச் செல்வதற்காக அத்தகைய தவறுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டம் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். நாம் பல காலமாகக் கோரி வந்த உதவி தொடர்பில் அவர் சாதகமான செயற்பாட்டைக் கொண்டிருப்பது பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

அண்மைக் காலங்களில் எமது நாட்டுக்கு விஜயம் செய்து பெறுமதி மிக்க ஆலோசனைகளை வழங்கிய சிறப்புத் தூதுவர்கள் விடயத்தில் நாம் தொடர் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்பதோடு அம்மையாரின் ஆதரவுடன் எமது மக்களுக்கும் நன்மை அளிக்கும் விசேட நடைமுறைகளுக்கு ஆக்க பூர்வமான உதவி எமக்கு கிடைக்கும் என நம்புகிறோம். ஓ

## சர்வதேச தொண்டு நிறுவனங்களின் இடைவெளியை அரசாங்கத்தினால் பூரணமாக நிரப்பி விட முடியாது

## தேசிய சமாதானப் பேரவை

வன்னிப் பிரதேசத்தில் மனிதாபிமான உதவிகளைவழங்கி வந்த சர்வதேச தொண்டு நிறுவனங்களின் வெளியேற்றத்தினால் ஏற்படக் கூடிய இடைவெளியை ஒரு போதும் அரசாங்கத்தினால் பூரணமாக நிரப்பிவிட முடியாதென தேசிய சமாதனப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

வன்னியில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் நலன் கருதி தொடர்ச்சியான மனிதாபிமானஉதவிகளைவழங்கசர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும் என பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு காட்டிய நெகிழ்வுப் போக்கு ஏனைய தொண்டு நிறுவனங்களுக்கும் காட்டப்பட வேண்டும் எனவும் இதன்மூலம் வன்னிப் பொதுமக்கள் பெரிதும் நன்மை அடைவர் எனவும் அந்த அமைப்புச் சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேசதொண்டுநிறுவனங்கள் வன்னியில்குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் இடர்களை எதிர்நோக்கியுள்ள பொதுமக்களுக்கு அளப் பரிய தொண்டாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ரீதியில் நாட்டின் சகல பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் முதன்மைக் கடமைகளில் ஒன்றெனஅந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

யுத்தம் காரணமாகஇடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்குத் தொண்டாற்றுவதில் விசேட அனுபவமும் பயிற்சியும் உடைய உலக உணவுத் திட்டம், யூ.என்.எச். சி. ஆர். போன்ற தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பும் அளப்பரியதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடிய சூழ் நிலையை ஏற்படுத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் சமாதானப் பேரவை வேண்டியுள்ளது. ஓ

# மன்னிப்பது-இறைச் செயல்



மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எல்லை உண்டு. வரம்பு உண்டு. அந்த வரம்புக்குள் தான் அனைத்தையும் செய்ய நினைக்கின்றான். அப்படி செய்கின்ற போதுதான் அந்தச் செயலும் நிறைவடைகின்றது. தக்க பலனைப் பெற்றுத்தருகின்றது. எந்தச் செயலும் வரம்பைக் கடக்கின்றபோது அது வம்பிலோ அல்லது துன்பத்திலோ சென்று முடிகின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

உதாரணமாக, தொழிற் கூடத்தில் வேலை செய்கின்றவன் ஒரு நாளைக்கு சராசரியாக 8மணிவரை வேலை செய்யலாம். கூடிப் போனால் 10 மணிவரை வேலை செய்யலாம். ஆனால், பணம் கிடைக்கிறது என்று சொல்லி ஒவர் டைம் வேலை செய்தால், அடுத்தநாள் அவன் உடல்நிலை பாதிக்கின்றது.

எனவே, எதையும் அளவோடு செய்யப் பழகிக் கொள்கின்றான். இதைப் போலத்தான் ஒருவன் தனக்கெதிராக தவறு செய்கின்றபோது மன்னிக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம்.

யூதப் பழக்கத்தின் படி ஒருவர் தவறு செய்கின்றபோது அவர் மன்னிப்பு என்று கேட்டால் மூன்று முறைவரை மன்னிக்கலாம். காரணம், மூன்று முறையும் கடவுள் தான் அவனை மன்னிக்கின்றார். மூன்று முறைக்கு மேல் தவறு செய்தால் அவன் இறைத் திட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும். இது தான் பழைய ஏற்பாட்டில் சட்டமாக இருந்தது.

ஒருவன் பாவம் செய்தால் அல்லது தவறு செய்தால் முதலில் தனிமையில் அவனைத் திருத்தவேண்டும். அதற்கு செவி சாய்க்காவிட்டால் இரண்டு மூன்று பேரைக் கூட்டி அவர்களிடம் சொல்லித் திருத்தவேண்டும். அதற்கும் செவிசாய்க்காவிட்டால் திருச் சபையிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.


இங்கு இயேசு கூறுவது மன்னிக்கிறவனும் வரம்பற்ற முறையில் இன்முகத்தோடு, உள்ளத்தில் வஞ்சகம் எதுவும் இல்லாமல் மன்னித்து மீண்டும் பழையபடி உறவோடு வாழ வேண்டும். இப்படி அவன் செய்தாலே தவறு செய்து விட்டு மன்னிப்புக் கேட்கிறவன் மீண்டும் அந்தத் தவறை செய்ய மாட்டான்.

அடுத்து, தவறு செய்தவனும் தன்னிலைக்கு நானி, தன் தவற்றை உணர்ந்து திருந்தி வாழ வேண்டும் என்று கூறுகிறார்.

ஜோன் ரொபேர்ட்

# தற்கொலைப் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் வேதனையளிக்கின்றன

## -ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன்



உலகம் முழுவதிலும் பெதுமக்களை இலக்கு வைத்து தற்கொலைப் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் வேதனைக் குரியதென ஐநாபொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தீவிரவாதத்தால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாதெனக் குறிப்பிட்ட பான் கீ மூன், இதன் காரணமாக உலகளவில் அதிகரித்து வரும் பயங்கரவாதத்தை அதன் ஆரம்ப கட்டத்திலேயே ஒடுக்க வேண்டுமெனவும் கூறினார்.

பொதுமக்களை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் நடத்தும் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றதெனவும், இது மிகவும் கவலையளிக்கின்றதெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாகிஸ்தானில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த எல்லைக்கப்பால் இருந்து தாக்குதலை மேற்கொண்டு வரும் அமெரிக்கக் கூட்டுப் படைகளின் தாக்குதல்கள் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.(ஓ)

# மருந்து ஏற்படுத்திய பக்க விளைவால் வெள்ளி நிறமாக மாறிய பெண்

(லண்டன்)

ஓராண்டாக மூக்கு சொட்டு மருந்து பயன்படுத்திய பெண் அதன் பக்க விளைவு காரணமாக வெள்ளி நிறத்துக்கு மாறி விட்டார். உலோகம் கலந்தமருந்துகளை பயன்படுத்துவதால் இது போன்ற ஏராளமான பக்க விளைவு அபாயம் உள்ளது. ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர் ரோஸ் மேரி ஜேக்கப். வயது66 இவருக்கு 11வயதாக இருக்கும் போது மூக்கில் அடைப்பு ஏற்பட்டது. இதற்காக டாக்டர் பரிந்துரைத்த படி சொட்டு மருந்து பயன்படுத்தினார். அந்த சொட்டு மருந்தில் திரவ நிலை வெள்ளி கலந்து இருந்தது .ஓராண்டாக இந்த மருந்தை அவர் பயன்படுத்தினார். நான்கு ஆண்டுகளுக்குப் பின் அவரது நிறம்மாறத் தொடங்கியது. சிறிது சிறிதாக நிறம் மாற்றம் ஏற்பட்டதால் அதை கவனிக்க தவறிவிட்டார் ரோஸ்மேரி. அன்றாடம் பார்ப்பவர்களுக்கும் நிறம் மாறிய வித்தியாசம் தெரிய வில்லை. நர்சாக பணியாற்றிவரும்இவரது பழைய தோழி இதை கண்டு பிடித்து விட்டார். ஆசிரியராக ரோஸ் மேரி பணியாற்றி வந்த போது உடல் முழுக்க வெள்ளி நிறமாக மாறி விட்டது. மருத்துவபரிசோதனையில் உடல் தோலில் வெள்ளி கலந்து இருப்பது தெரிய வந்தது . இவரது விகாரமான நிறத்தால் எல்லா ரும் இவரை அலட்சியப்படுத்தினர். தொடர்ந்து மேற் கொண்ட சிகிச்சையில் உடலின் நிறம் ஓரளவு பழைய நிலைக்கு திரும்பியது. தற்போது இணையத்தளங்களில் ஒன்- லை னில் விற்பனை செய்யப்படும் பல மருந் துகளில் திரவ நிலை வெள்ளி கலந்துள்ளது . இதனால் கடும் பக்கவிளைவுகள் ஏற்படும் என்ற விழிப் புணர்வு ஏற்படுத்தும் இயக்கத்தை துவக்கி உள்ளார் ரோஸ் மேரி. (ஓ)

# இராணுவத் தாக்குலில் 130 தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடியின மாநில மான பஜாவர் உள்ளது .அங்கு தலீபான் தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் கடந்த மாதம் தீவிர தாக்குதலை தொடங்கி உள்ளது. கடந்த வியாழன் நடைபெற்ற தாக்குதலில் 100 தீவிரவாதிகளும் வெள்ளியன்று 30 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

ஆனால் 700க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியானதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. 3இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் இதனால் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த தாக்குதலில் இராணுவ தரப்பில் இதுவரை 30பேர் பலியாகி உள்ளனர்.

பீரங்கி தடாங்கி மற்றும் விமானப் படையினர் உதவியுடன் இராணுவத்தினர் தீவிரவாதிகளுக்கு எதிரான இந்த தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-6)

# அதிகமான சிந்தனையால் உடற்பருமன் அதிகரிக்கும் -ஆய்வில் தெரிவிப்பு

அதிகமாக யோசிக்க யோசிக்க சாப்பிடத் தோன்றும். அதனால் உடல் குண்டாகும் என கனடாவில் உள்ள லாவர் பல்கலைக்கழக நிபுணர்கள் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. நிபுணர்கள் ஆய்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது, எந்த ஒருவிஷயம் பற்றியும் அதிகமாக சிந்தனை செய்யவே கூடாது. திட்டமிடல் என்பது வேறு. அதற்காக அதிகமாக சிந்திப்பது என்பது வேறு சிந்திப்பதன் விளைவாக உரிய நடவடிக்கையில் இறங்க வேண்டும். அப்படியில்லாமல் அதிக நேரம் சிந்தனையிலேயே மூழ்கி விடுவது உடல் நிலையைப் பாதிக்கும். இதற்காக நாங்கள் இரு பிரிவாக சில மாணவர்களை பிரித்து பரிசோதனை செய்ய விரும்பினோம். அதற்காக 20 மாணவர்களை அழைத்து ஓய்வு எடுப்பது, படிப்பது, நினைவாற்றலுக்கு பயிற்சி செய்வது ஆகியவற்றை செய்ய வைத்தோம். அவற்றை அவர்கள் தினமும் செய்த பின் சாப்பிட்டனர். அப்போது அவர்கள் உடலில் ஏறிய கலோரியை கணக்கிட்டோம். இது போல இன்னொரு பிரிவு மாணவர்களுக்கு கொம்ப்யூட்டர் மூலமான நினைவாற்றல் பரிசோதனைகளை அளித்தோம். அதற்காக அவர்கள் அதிகநேரம் சிந்தித்த படி இருந்தனர். அவர்கள் சாப்பிட்ட பின்னும் அவர்கள் உடலில் கூடிய கலோரி அளவைக் கண்கிட்டோம். முதல்பிரிவினரை விட இவர்கள் அதிகம் சாப்பிட்டனர். ஒரு வார சோதனைக்குப் பின் முதல் பிரிவு மாணவர்களில் சராசரியாக 203 கலோரி கூடியது தெரிய வந்துள்ளது. அதிகநேரம் யோசித்து கொம்ப்யூட்டர் நினைவாற்றல் பரிசோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொண்ட இரண்டாவது பிரிவு மாணவர்களுக்கு 253 கலோரி சேர்ந்தது தெரியவந்தது. இந்த இரு பிரிவு மாணவர்களின் இரத்தமும் பரிசோதிக்கப்பட்டது. இரண்டாவது பிரிவு மாணவர்களுக்கு உடலில் இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு கூடியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் உடல் எடை கூடி குண்டாக இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. இன்றைய இளம் தலைமுறையினர் அதிக நேரம் கொம்ப்யூட்டரே கதி என்று இருப்பதால் தான் அவர்கள் அதிகம் சாப்பிட நேர்கிறது. இதனால் அவர்களுக்கு உடல் பருமனால் பிரச்சினை ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கும் சூகிக்கு சலுகைகள்

(யாங்கோன்)



மியன்மார் நாட்டின் ஜனநாயக ஆட்சியை கொண்டுவருவதற்காக போராடி வரும் தலைவர் சூகி ஒரு பெண்ணாக இருந்த போதிலும் அவர் மன உறுதியுடன் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை நடத்தி வருகிறார். இதனால் 63 வயதான அவரை அந்த நாட்டு இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டுக் காவலில் வைத்துஉள்ளனர். வீட்டுக்குள் அவரது குடும்பத்தினர் அனுப்பும் கடிதங்களையும் வெளி நாட்டுப் பத்திரிகைகளையும் அனுமதிக்க அரசாங்கம் மறுத்து வந்தது. இதனால் அவர் உண்ணவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் அவரது கோரிக்கைகளில் சிலவற்றை இராணுவ ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டனர். அதன்படி அவருக்கு குடும்பத்தினர் அனுப்பிய கடிதங்களை அனுமதிப்பது, வெளிநாட்டு பத்திரிகைகளை அனுமதிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதைத் தொடர்ந்து அவர் உண்ணாவிரதத்தை கைவிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ஓ-6)

**உலக தரிசனம்**

# பிரபஞ்ச ரகசியம் அறியும் சோதனையில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன ?

(ஜெனீவா)

"பிக்- பேங்" எனப்படும் மிகப் பெரிய வெடிப்பு சோதனை பெரிய அளவில் பேசப்படுகிறது. இதனால் பெரிய ஆபத்து ஏற்படும் என்று அச்சப்பட்டு ஒரு சிறுமி இறந்திருக்கிறாள். அணு விஞ்ஞானியும் முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான அப்துல்கலாம் இந்த சோதனைக்கூடத்தை நேரில் பார்த்தவர். அவர் இதுகுறித்து அச்சப்பட வேண்டாம் என்று கூறியும் ஒரு பெரிய இயற்பியல் சோதனை நடக்கும் போது அதை எதிர்த்து ஏராளமான தகவல்கள் ஊடகங்களில் வந்து குவிகின்றன.

இந்த பிரபஞ்சம் தோன்றியது எப்படி ? சிறிய அணுத் துகள் வெடித்துக் கிளம்பும் சக்தியில் அவ்வளவு பெரிய சக்தி. அதனால் புதியதோற்றம் எப்படி? என்பதற்கு விடைகாணும் பிரமாண்ட விஞ்ஞான ஆய்வு நடக்கிறது. இது உடனடியாக முடிவைத் தரப் போவதில்லை. அணு ஆய்வுகளை நடத்தும் ஐரோப்பிய அமைப்பு சேர்ன். அதில் பணியாற்றும் விஞ்ஞானிகளும் உலக அளவில் இயற்பியல் விஞ்ஞானிகள் பலரும் தங்களது நீண்ட ஆய்வின் அடிப்படையில் பல ஆயிரம் கோடி செலவில் உருவாக்கியது "லார்ஜ்ஹாட்ரன் கொலைடர்" சுருக்கமாக எல் எச். சி என்கின்றனர். பூமிக்கடியில் 27கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்ட இந்த சுரங்கப் பாதை ஒரு பெரிய தேவாலயத்தை விட உயரமும் அகலமும் நிறைந்தது. இதனுள் மிகவும் குளிர் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் காந்தக் கட்டிகள் மேல் புரோத்தன் துகள் கற்றை மோதும் போது சக்தியை ஆய்வது தான் இந்த முயற்சியின் முக்கிய அம்சமாகும்.

இது குறித்த மேலும் சில தகவல்கள்,

பிங்-பேங்க் தத்துவம் என்ன என்பதை ஆராயும் "கொலைடர்" 20 ஆண்டுகள் முயற்சிகளில் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து எல்லையில் பூமிக்கடியில் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டது. இதில் "டார்க் மேட்டார்" என்னும் அறியப்படாத சக்தி பற்றி ஆராய்வதுடன் இதில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் பற்றி மறு பரிசீலனை செய்யும் வகையில் சோதனை தொடங்கியிருக்கிறது. கடந்த புதன் கிழமை துவங்கிய புரோத்தன் துகள் மோதல் இந்த இராட்சத சுரங்கத்தில் ஒரு வினாடிக்கு 11 ஆயிரம் தடவை வேகமாகப் பயணிக்கும் மற்றொரு எதிர் புரோத்தன் துகள் மோதும் போது கிடைக்கும் அபரிமித சக்தி தான் விஞ்ஞானிகளின் கேள்விகளுக்கு விடை தரப்போகிறது.

இந்த ராட்சத மோதலில் கிடைக்கும் தகவல்ளை ஒவ்வொரு வினாடியிலும் பதிவு செய்ய மக்னடிக் டேப் வசதியும் உள்ளது. அதில் 700 ஜிகாபைட் என்ற பிரமாண்ட தகவல் சேகரிக்கும் வசதியும் இருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு இயற்பியல் ஆய்வுகூடங்களில் உள்ள ஒரு இலட்சம் கொம்யூட்டர்கள் இத் தகவலைப் பதிவு செய்யும் கற்பாறைகள் ஊடே சுரங்கப் பாதை இருப்பதால் பெரிய அளவில் அணுக் கதிர் வீச்சு அல்லது பாதிப்பு எதுவும் இருக்காது.

இந்த மோதலில் ஏற்படும் பிளாக் ஹோல் உடனடியாக கரைந்து போகும். ஹாக்கின்ஸ் கதிர்வீச்சு தத்துவப்படி அப்படியே சுருங்கி காணாமல் போகும். ஆகவே பிளாக் ஹோல் பாதிப்பில் உலகத்திற்கு ஆபத்து என்பது சரியல்ல. இன்னும் இரு ஆண்டுகள் கழித்து இந்த சோதனை ஆய்வுகளில் பிரபஞ்ச ரகசியம் குறித்த கருப்பொருள் ஆய்வில் வெற்றி கிடைத்தால் அடுத்ததாக "இன்டர்நஷனல் லீனியர் கொலைடர்" என்ற பெரிய சுரங்கப் பாதை அமைத்து புரோத்தன் துகள் கற்றைகள் பலவற்றை மோத விட்டு புதிய தகவல்கள் பெறவிஞ்ஞானிகள் முயற்சிப்பார்கள் என்று கூறப்படுகிறது. (ஓ-6)

# தாயைக் காப்பாற்ற உதவிய 11 மாதக் குழந்தை

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் உள்ள எசெக்ஸ் மாநிலம் பிரெய்ன்ட்ரீ நகரைச் சேர்ந்தவர் எலிசபெத். 20 வயதான அவருக்கு திருமணமாகி 11 மாதக் குழந்தை உள்.அந்த பெண்ணுக்கு அடிக்கடி மயக்கம் வருவது உண்டு. சம்பவம் நடந்த அன்று அந்தப் பெண் மயங்கிவிழுந்து விட்டார்.வீட்டில் அவரையும் குழந்தையையும் தவிர வேறு யாரும் இல்லை. அந்த நேரத்தில் செல்போன் ஒலித்தது. அதை குழந்தை அமெலியா போயல் எடுத்து மாமா என்று கூறியது.

குழந்தையின் குரலைக் கேட்டதும் போன் செய்த பாட்டி லிண்டா ரைட்டுக்கு புரிந்து விட்டது. மகளுக்கு உடல் பாதிப்பு ஏற்பட்டு விட்டது. அதனால் தான் பேத்தி போனை எடுத்திருக்கிறாள் என்பதை புரிந்துகொண்ட அவர் உடனே அம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தார்.

உடனே மருத்துவ பணியாளர்கள் அம்புலன்சில் வீட்டுக்குச் சென்று எலிசபெத்துக்கு சிகிச்சை அளித்தனர். இதில் அவர் குணம் அடைந்தார். அதன் பிறகு தான் குழந்தை தன் உயிரைக் காப்பாற்ற எந்த அளவுக்கு உதவியது என்பதை தன் உறவினர்களிடம் சொல்லி சந்தோஷப்பட்டார். (ஓ-6)

# தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி கைப்பற்றியது. யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் 185-வது ஆண்டு விழாவை முன்னிட்டு கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றி கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து நடாத்தியது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 12 பாடசாலை அணிகள் இச் சுற்றுத் தொடரில் பங்கேற்றன. இதில் அணிக்கு 6 பேர் கொண்ட 5 பரிமாற்றங்களுடைய போட்டித் தொடராக நடைபெற்றது.

இத் தொடரில் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் யாழ்.சென்.பற்றிக்ஸ் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

நேற்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென். பற்றிக்ஸ் அணி 4.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் பந்து வீச்சில் அணித் தலைவர் வி.ஜோயல் செகான், றீசேதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 5 ஓவர்களில் 34 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 3.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 34 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்று எஸ். தனபாலன் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப் போட்டியின் நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் ஜோயல் செகான் தெரிவானதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக சென்.பற்றிக்ஸ் அணியின் நவதீபனும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஹரிவ்தினனும் சிறந்த சகல துறை வீரர் மற்றும் ஒரு போட்டியில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த வீரர் (13 பந்துகளில் 53 ஓட்டங்களைக் குவித்த) யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மிலாண்டே ஜோசப்பும் தெரிவானார்கள்.

இச் சுற்றுப் போட்டியில் ஒருபோட்டியில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த அணிக்கான விருதை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் 5 ஓவர்கள் நிறைவில் 106 ஓட்டங்களைக் குவித்த சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

இதேவேளை நேற்று நடைபெற்ற 3-வது இடத்துக்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை அணியை வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. (05)

## டெஸ்டில் நடுவரின் முடிபை மேல் முறையிடும் முறை தொடரும்

### ஐ.சி.சி. அறிவிப்பு

(டுபாய்)

டெஸ்ட் போட்டிகளில் நடுவர்களின் முடிபுகளை மறுபரிசீலனை செய்யக் கோரும் பரிசோதனை முறை தொடர்ந்து பின்பற்றப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற இந்தியா-இலங்கை தொடரின்போது நடுவர் தீர்ப்புக்களை மறுபரிசீலனை செய்யக் கோரும் முறை பரிசோதனை அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டது.

இதன்படி ஒவ்வொரு அணியும் 3 முறை மறுபரிசீலனை கோரலாம். இந் நிலையில் மேலும் சில தொடர்களுக்கு இந்த முறை பரிசோதனை அடிப்படையில் பின்பற்றப்படும் என்று கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் இம்முறையை ஏற்பது பற்றி இறுதி முடிபு எடுக்கப்படும் எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) குறிப்பிட்டுள்ளது. (05)

## நியூ.அணியில் மீண்டும் ரைடர்

(வெலிங்டன்)

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் காயம் காரணமாக ஓய்விலிருந்த நியூசிலாந்தின் ஜெசி ரைடர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். டானியல் விக்டோரி தலைமையிலான நியூசிலாந்து அணி அடுத்த மாதம் பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நியூசிலாந்தின் ஜெசி ரைடர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுவரை 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்ற இவர் ஒரு அரைச் சதம் உட்பட 196 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்ற இவரது பங்கு மிக முக்கியமானதாக அமைந்தது. கையில் காயம் காரணமாக ஓய்விலிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## ஆஸி.தொடரில் மூத்த வீரர்கள் சிறப்பாக செயற்படாவிட்டால் நீக்கம்

### இந்திய தேர்வுக் குழு முடிபு


(அவுஸ்திரேலியா)

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் மூத்த வீரர்கள் சிறப்பாகச் செயற்படாது விட்டால் அணியிலிருந்து நீக்கிவிட இந்திய அணி தேர்வுக் குழுமுடிப்பு செய்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதற்காக இந்த அணி எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியா வருகின்றது.

இந்தப் போட்டிக்கான இந்திய அணி தேர்வு வதோதராவில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும் இராணிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தேர்வு செய்யப்படுகின்றது.

இராணி கிண்ண போட்டிக்கான டெஸ்ட் ஒவ் இந்தியா அணியில் கங்குலிக்கு இடம் கிடைக்காததன் மூலம் அவர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடிக்க மாட்டார் என்பது உறுதியாகிவிட்டது.



அதேநேரத்தில் கங்குலிக்கு இடம் கொடுக்கப்படாததன் மூலம் தேர்வாளர்கள் மற்ற சிரேஷ்ட வீரர்களான டெண்டுல்கர், ராவிட், லக்ஷ்மன் ஆகியோருக்கு மறைமுக எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதுகுறித்து இந்திய அணி தேர்வுக் குழு உறுப்பினரான பெயர் வெளியிட விரும்பாத ஒருவர் கூறியதாவது,

டெஸ்ட் ஒவ் இந்திய அணியில் கங்குலிக்கு இடம் கிடைக்காததன் மூலம் மூத்த வீரர்கள் சிறப்பாக செயல்படாவிட்டால் அணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்பதுதான் நாங்கள் விடுத்த செய்தியாகும். அதேநேரத்தில் நாங்கள் டெஸ்ட் அணியில் அதிக மாற்றம் செய்ய மாட்டோம்.

உலக சம்பியன் அணிக்கு எதிராக விளையாட இருப்பதால் நாம் அணியில் மூத்த வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டியது தேவையானதாகும். டெண்டுல்கர், ராவிட், லக்ஷ்மன், கும்ளே போன்ற வீரர்களை நாம் ஒரேநாள் இரவில் மாற்றிவிட முடியாது.

முதலில் அவர்களின் இடத்தை சரியாக நிரப்பக் கூடிய வீரர்களை அடையாளம் காண வேண்டும். அதன் பின்னர் படிப்படியாக மாற்றம் செய்ய வேண்டும். நிலையான திறனை வெளிப்படுத்தாவிட்டால் எந்தவொரு வீரரும் அணியில் நிரந்தர இடம் பிடிக்க முடியாது.

எந்த அணியும் நல்ல தரம் வாய்ந்த மூத்த வீரர்களைத் திடீரென மாற்ற முடியாது. பத்ரிநாத், ரோஹித் சர்மா, விராத், செஹலி, சுரேஷ் ரெய்னா போன்ற சிறந்த இளம் வீரர்கள் நம்மிடம் உள்ளனர்.


ஆனால் அவர்கள் அவுஸ்திரேலியா போன்ற சிறந்த அணிக்கு எதிராக நல்ல ஆட்டத்தை அளிப்பார்கள் என்ற உத்தரவாதம் இல்லை. எந்தவொரு மாற்றம் தேவைப்பட்டாலும் அதனை அவசரமின்றி படிப்படியாகச் செய்ய வேண்டும்.

சொந்த மண்ணில் நடைபெறும் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் (6 ஆட்டங்கள்) தொடரில் மூத்த வீரர்கள் கௌரமான ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்று நினைக்கின்றோம்.

வீரர்களின் திறனைப் பார்த்து அடுத்து வரும் தேர்வாளர்கள் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என்றார். (05)

## பவெல், டைசன் கேயின் சவாலைச் சந்திக்கத் தயார்

### உஷைன் போல்ட் கூறுகின்றார்



(பரிஸ்)

ஒலிம்பிக்கில் சோபிக்கத் தவறிய அசாபா பவெல் மற்றும் டைசன் கே அடுத்த ஆண்டு சவால் தந்தால் அதைச் சந்திக்கத் தயார் என உலகின் அதிக வேக மனிதர் உஷைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் ஜமெக்காவின் நட்சத்திர வீரர் உஷைன் போல்ட் 3 உலக சாதனைகள் படைத்து உலக தடகள அரங்கை அதிர வைத்தார்.

இவர் கலந்து கொண்ட 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டங்களில் தங்கம் கைப்பற்றி அசத்தினார். சக நாட்டு வீரரும் முன்னாள் 100 மீற்றர் உலக சாதனையாளருமான அசாபா பவெல் 5-வது இடம் பிடித்து ஏமாற்றம் அளித்தார்.

இவர் முந்தைய 100 மீற்றர் சாதனையை (9.72) பீஜிங்கில் 9.69 விநாடியில் வந்து தகர்த்த போல்ட் புதிய உலக சாதனை படைத்தார். இதேபோல் அமெரிக்க வீரரான டைசன் கே கடும் போட்டி தருவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஏமாற்றம் அளித்தார்.

பரிசில் பேட்டியளித்த போல்ட் கூறுகையில், அசாபா மற்றும் டைசன் அடுத்த ஆண்டு சிறப்பான முறையில் தயாராகி எனக்குச் சவால் தந்தால் சந்திக்கத் தயாராகவுள்ளேன். இதனை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றேன்.

அசாபாவுக்கும் எனக்கும் உரசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மையல்ல. நாங்கள் நல்ல நண்பர்கள். களம் இறங்கிவிட்டால் போட்டியில் கவனம் செலுத்துவோம். ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னரும் நான் நடனமாடுவது இரசிகர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில்தான் என்றார் போல்ட்.

இதேவேளை தற்போது ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் கால் பந்து அணியுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட ஒப்புதல் அளித்துள்ளார். (05)

## எதியோப்பியா நீக்கம்

2010 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இருந்து எதியோப்பியா நீக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டு கால்பந்து பெடரேஷன் நிர்வாகிகள் தேர்வு விடயத்தில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் சமரசத்தை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

## பராலிம்பிக்கில் உக்ரைன் அசத்தல் ஒரே நாளில் 3 உலக சாதனை படைத்தது

(பீஜிங்)

பீஜிங் பராலிம்பிக் போட்டியில் உக்ரைன் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம், குண்டெறிதல், ஆண்களுக்கான 200 மீற்றர் நீச்சல் என ஒரே நாளில் 3 போட்டிகளில் புதிய உலக சாதனை படைத்தனர்.

தலைநகர் பீஜிங்கில் 13-வது பராலிம்பிக் போட்டிகள் நடக்கின்றன. நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் உக்ரைன் வீராங்கனை அலா மல்சிக் 9.33 மீற்றர் தூரம் எறிந்து புதிய உலக சாதனையுடன் தங்கம் வென்றார்.

வெள்ளியை சீனாவின் வு கியுங்கும் வெண்கலத்தை போலந்தின் ரினடா சிலிவ்ஸ்காவும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் உக்ரைன் வீராங்கனை இனா டயாசின்கோ 27.93 விநாடிகளில் வந்து புதிய உலக சாதனை படைத்தார். ஆண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்டே நீச்சல் போட்டியில் உக்ரைன் அலக்ஸி பெடினா 2 நிமிடம் 16.32 விநாடிகளில் வந்து சாதனை படைத்தார்.

இதன்மூலம் நேற்று முன்தினம் ஒரே நாளில் உக்ரைன் மூன்று புதிய உலக சாதனைகளை படைத்தது. இதேவேளை நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 400 மீற்றர் பிறிஸ் டைல்ஸ் நீச்சலில் அமெரிக்காவின் ஜெசிகா லாங் அபாரமாகச் செயற்பட்டுத் தங்கம் வென்றார். இதன் மூலம் பீஜிங் பராலிம்பிக்கில் 4 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட 6 பதக்கம் வென்று அதிக பதக்கம் வென்ற வரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். (05)

# உலக வல்லாதிக்கத்தின் உதவிகளை அம்பலப்படுத்திய விமானத் தாக்குதல்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வானூர்தி தாக்குதலானது தமிழின அழிப்புக்கு உலக வல்லாதிக்க சக்திகள் அரசுக்கு செய்கின்ற ஒத்துழைப்புக்களை அம்பலப்படுத்தியுள்ளது என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

வன்னி படை நடவடிக்கை தலைமை மையமான வவுனியா படைத்தள தாக்குதலில் உயிரிழந்த கரும்புலி மாவீரர்களின் வீரவணக்க கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

எமது மக்கள் விடுதலைக் குறிக்கோளை அடைவதற்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து வீரவரலாறாகியவர்கள் இக் கரும்புலி வீரர்கள். ஒரு பெரும் வரலாற்றை படைத்தவர்களுக்கு நாம் வணக்கத்தை செலுத்துகின்றோம்.

வீரவரலாறு படைத்த கரும்புலிகளுக்கு தனி வரலாறு உண்டு. எமது விடுதலைப் போராட்டத்தில் நெருக்கடியான காலகட்டங்களில் நெருக்கடிகளை உடைத்தெறிந்து விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்திச் செல்வதில் இக் கரும்புலி மாவீரர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

இக் கரும்புலிகள் கொடுத்த அடி சிங்களத்தின் படை இதயத்தில் விழுந்த அடியாகும். எமது மக்கள் மீது வானூர்தி தாக்குதல்களை நிகழ்த்தும் நடவடிக்கைக்கான மையத்தின் மீது விழுந்த அடி இது.

தமிழ் மக்களின் நிலங்களை கைப்பற்றி தமிழ் மக்களைப் பிடித்து அடைத்து வதைக்கும் வதை முகாம்களை புதைகுழிகளைக் கொண்டதுமான படை நடவடிக்கை மையத் தளத்தில் கரும்புலிகள் தமது வீர வரலாற்றைப் படைத்துள்ளனர்.



எமது வான் படையினை கண்காணிக்கும் தளமாகவும் இது இருந்தது. இத்தாக்குதல் என்பது தமிழின அழிப்புக்கு உலக வல்லாதிக்க சக்திகள் சிங்களத்துக்கு செய்கின்ற ஒத்துழைப்புக்களை அம்பலப்படுத்தியுள்ளது.

எந்த வல்லாதிக்க சக்திகள் எமது போராட்டத்துக்கு எதிராக சிங்கள அரசுக்கு உதவி புரிந்தாலும் எந்த சக்தியாலும் எமது மக்களின் விடுதலை உணர்வைத் தகர்க்க முடியாது என்றார் அவர். (எ-5)

## இரா.சம்பந்தன் இந்தியாவுக்குப் பயணம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

நேற்று பிற்பகல் இந்தியா சென்ற அவர் அங்கு மத்திய மற்றும் தமிழக அரசியல் தலைவர்கள் சிலரைச் சந்தித்து வடக்கு - கிழக்கு நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவார் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலை தொடர்பாகவும் நிவாரணம் வழங்கப்படாமை குறித்தும் சந்திப்பின்போது இரா.சம்பந்தன் எடுத்துக் கூறுவார் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்திய வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலரை சம்பந்தன் சந்தித்து கலந்துரையாடுவார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா சென்று திரும்பிய பின்னரே இம்மாத இறுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பார் என்று சென்னையில் இருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ச-5)

## வெளிமாவட்டங்களைச்...

லாமல் கொழும்பில் தங்கியிருப்போர் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும். இவ்வாறு தங்கியிருக்கும் பொது மக்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்து விடுவதனால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் கொழும்பிலிருந்த தமிழர்கள் அகற்றப்பட்டபோது சர்வதேச ரீதியில் பாரிய அதிர்வுகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் அல்லது தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் கொழும்பிற்கு வருகை தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## பொலிஸார்...

இதில் பொலிசைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். காயமடைந்த பொலிஸ் துறையைச் சேர்ந்தவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரட்நாயக்க (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இதேவேளை வெல்லாவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட மண்டூரிலிருந்து வெல்லாவெளி நோக்கி சென்று கொண்டிருந்த பொலிஸாரின் ட்ரக் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதல் நேற்று முற்பகல் 9.20 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது. இதில் பொலிஸார் ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல் லப்பட்டார்.

(ச-5)

## தமிழினத்தை...

செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்கிர மோதல்கள் இடம்பெறுகின்றமையினால் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இராமேஸ்வரத்...

படகு மறுநாள் அதிகாலை தனுஷ்கோடி கடல் பகுதிக்குச் சென்றபோது,பலத்த காற்று வீசியதால் படகு கவிழ்ந்தது. இதில் வயதான ஒரு ஆண், நான்கு பெண்கள், இரண்டு குழந்தைகள் கடலில் மூழ்கி பலியாயினர்.

ஒரு பெண் உட்பட ஆறுபேர் நீந்தி தனுஷ்கோடி அருகில் உள்ள மூன்றாவது மணல் திட்டில் கரையேறினர்.

படகோட்டி தனுஷ்கோடியில் கரையேறினார்.

(ச-5)

## வன்னி மக்களுக்கு...

குழு தெரிவித்துள்ளது.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவில் பணியாற்றிக் கொண்டிருக்கும் கத்தோலிக்க திருச்சபையின் தொண்டு நிறுவனங்களின் மூலமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் பொருட்களை வழங்குவதற்காகவே இந்த முதற்கட்ட நிதியை கையளிக்கவுள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பின்னர் இரண்டாம்கட்ட நிதி சேகரிப்பு நடியாக தொடங்கும் என்று தெரிவித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளும உறுப்பின்ர்கள், வர்த்தகர்கள், பிரமுக ஆகியோரிடம் இருந்து நன்கொடை நிதி எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தன

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 03/10/2008
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 04/10/2008

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology
-Executive Officer

## புதுடில்லியில் நேற்று மாலை...

வித்தனர். அந்த இடத்தில் நடந்த குண்டு வெடிப்புக்களில் மட்டும் 10 பேர் வரை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சில நிமிடங்களில் டில்லியில் மையப் பகுதியான கன்னாட் பிளேஸ் பகுதியில் குண்டு வெடிப்பு நடந்தது. அங்கு பிரதான மெட்ரோ ரயில் நிலையம் அமைந்துள்ள ராஜீவ் சௌக்மெட்ரோ ரயில் நிலையத்தின் மேல்பகுதியில் அமைந்திருக்கும் சென்ரல் பார்க் பகுதியில் குண்டு வெடித்தது.

குப்பைத் தொட்டியில் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு கூடியிருந்த பலர் காயமடைந்தனர்.

அதையடுத்து அதற்கு அருகிலுள்ள பாரகம்பா றோட்டில் குண்டு வெடித்தது. குப்பைத் தொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அந்த வழியாகச் சென்ற பலர் படுகாயமடைந்தார்கள்.

தெற்கு டில்லிப் பகுதியிலுள்ள கிரேட்டர் கைலாஷில் உள்ள எம். பிளாக் மார்க்கெட்டில் இரண்டு குண்டுகள் வெடித்தன. வாகனங்களில் வைக்கப்பட்ட இந்தக் குண்டுகள் 15 நிமிட இடைவெளியில் வெடித்தன.

கரோல் பார்க் பகுதியில் குண்டு வெடிப்பு ஏற்பட்ட தகவல்களை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்த மார்க்கெட்டிலும் குண்டு வெடித்ததாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்களில் படுகாயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு பலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்கள்.

காயமடைந்த பலர் ஆபத்தான நிலையில் இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

சென்ரல் பார்க், ரீகல் சினிமா மற்றும் இந்தியா கேட் உள்ளிட்ட இடங்களில் வெடிக்காத குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பு உரிமைகோரியிருக்கின்றது. 9 குண்டு வெடிப்புக்கள் நடக்கும் என்றும் தங்களை யாராலும் தடுக்க முடியாது என்றும் சில ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிய ஈமெயில் தகவலில் தெரிவித்துள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு பிரதமர் உட்பட பல்வேறு தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

(ச-5)

## வன்னி மக்களின் போராட்டத்...

ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரிகள் வ்ன்னிக்கு வந்து, இடம்பெயர்ந்துள்ள 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்களை கைவிட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையம் வெளியேறுகின்றது என்று பகிரங்க அறிக்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு கிளிநொச்சியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணைய பிரதிநிதி இத்தகவலை தாம் ஜெனீவாவுக்கு மின்னஞ்சலில் அனுப்பியுள்ளதாகவும் அவர்களின் பதிலைப் பெற இன்றுவரை அவகாசம் தருமாறும் கேட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரிகள் வரும் வரை வன்னியிலிருந்து அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வெளியேற அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்து மக்கள் நேற்று முன்தினம் முதல் போராட்டம் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் வெளியேற்றத்திற்கு எதிராக புலம்பெயர்வாழ் தமிழ் மக்கள் மடல்களை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு அனுப்புமாறு வன்னிவாழ் தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை அரசின் இன அழிப்பு முகத்தை அம்பலப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு மடல்களை அதிகம் அனுப்புமாறும் அவர்கள் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர். (எ-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.